# கட்டுரைக் கலம்பகம்

3432

வித்துவான்

ச. கு. கணபதி ஐயர்

எழுதியது.

உரிமை பதிவு] 1936 [விலை அணா 10.

=/10/=

PRESENTED BY:
M.
ETTIAR
KASIVIS

# கட்டுரைக் கலம்பகம்

3432

வித்துவான்

ச. கு. கணபதி ஐயர்

எழுதியது.

உரிமை பதிவு] 1936 [விலை அணா 10.

3422

# Dedicated To:

The Sacred Memory Of My
Late Revered Father,
Mr. R. V. Venkatramana Iyer, B. A.
(Tahsildar, Salem Dt.)

# பொருளடக்கம்


1. இந்திய மாணவர் .... 1
2. பாணர்கள் .... 19
3. "நான் கண்ட நல்லிடங்கள்" .... 38
4. தமிழ் வைத்தியம் .... 50
5. குழல் .... 63
6. தமிழிற் பிறமொழிக் கலப்பு .... 80
7. முரசு .... 97

# முகவுரை

3432

**கா**லத்திற்கேற்ப எல்லாம் மாறிவருகின்றன. தமிழ்மொழியைப் பற்றியமட்டில் முற்காலத்தில் ஜனங்களுக்குச் சிறந்த செய்யுள் நூல்களில் விருப்பம் எவ்வளவு அதிகமாக இருந்ததோ அதைக்காட்டிலும் அதிகமான விருப்பம் இக்காலத்தினருக்கு வசன நூல்களில் இருந்து வருவதைத் தமிழுலகம் நன்கு அறியும்.

வசன நூல்கள் இப்போது மிக அதிகமாக இருந்தாலும் பழைய நூல்களிற் காணப்படும் சரித்திரச் செய்திகளையும் பெரியோர்களுடைய வரலாறுகளையும் அருமையான பிறவிஷயங்களையும் வசனநடையிற் படித்துப் பயனடைவதைப் பெரும்பாலோர் விரும்புகின்றனர். இக்கருத்தை உட்கொண்டு பண்டைத்தமிழ் நூல்களிலிருந்து நான் தெரிந்துகொண்ட சில செய்திகளை அவ்வப்போது 'கலைமகள்' என்னும் மாதப் பத்திரிகையில் எழுதிவந்தேன். அவற்றைப் படித்தவர்கள் அவை எல்லாம் ஒரு புத்தக வடிவத்திற் சேர்ந்து வெளிவருமானால் படிப்பவர்களுக்கு மிக்க பயன்படுமென்று கூறினார்கள். அதனால் இப்போது அவற்றுள் சிலவற்றையும் புதியதாக வெழுதிய 'முரசு' என்ற கட்டுரையையும் சேர்த்துக் 'கட்டுரைக் கலம்பகம்' என்ற இப்புத்தகத்தை வெளியிடலானேன்.

என்னுடைய அநுபவக் குறைவாலும் வேறு பல காரணங்களாலும் இதில் தவறுகள் நேர்ந்திருத்தல் கூடும். அவற்றை அறிஞர்கள் அன்பு கூர்ந்து தெரிவிப்பார்களாயின் மிக்க நன்றியுடன் ஏற்றுக்கொண்டு அடுத்த பதிப்பிற் பயன்படுத்திக் கொள்ளுவேன்.

எனது இச்சிறு முயற்சியால் வெளிவந்த இப் புத்தகம் தமிழ்நாட்டில் பரவுமாயின் அதுவே எனக்குப் போதிய ஊக்கத்தை அளிக்கும்.

627, திருவல்லிக்கேணி
ஹைரோட், சென்னை.
25-9-1936.

இங்ஙனம்,
ச. கு. க.

3432

# கட்டுரைக் கலம்பகம்

## இந்திய மாணவர்

ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமானால் அதிலுள்ள இளைஞர்கள் முதன் முதலில் நல்ல நிலைமையை அடையவேண்டும். அதற்குக் கல்வி இன்றியமையாதது. தேச முன்னேற்றத்துக்கு அவசியமான விஷயங்களைச் சிறுவர் மனத்திற் பதியும்படி போதித்தல் எளியதாகும். அவர்கள் மனம் எந்தக் கொள்கையையும் வெறுப்பின்றி ஏற்றுக்கொள்ளத் தக்க நிலையையுடையது. சிறுவர் மனத்தில் விஷயங்கள் பசுமரத்தாணிபோல் உறுதியாகவும் எளிதாகவும் பதிந்துவிடுகின்றன. இளமைப் பழக்கம் என்றும் மாறுவதில்லை. சிறு பிராயத்தில் நல்ல பயிற்சி பெற்றவர்கள் பெரியவர்களாகும்போது அவர்களால் நாட்டுக்கு எவ்வளவோ நன்மைகள் உண்டாகின்றன. இவற்றை நினைந்தே பல பெரியோர்கள் 'ஒரு நாடு சிறப்படைவதற்கு அந்நாட்டுச் சிறுவர் முன்னேற்ற

மடைதலே முதற்காரணம்' என்று கூறியிருக்கிருர்கள். மாணவர்களுடைய லக்ஷியங்களுக்கேற்ப அவர்களைப் பயிலுவிக்காமையாலேயே இக்காலத்தில் நாம் பலதுறைகளிற் பிறநாட்டவருக்குப் பின்னடைந்திருக்கிறோம் என்ற உணர்ச்சி இப்பொழுது பல இடங்களில் பரவியுள்ளது. இக்குறையைப் போக்க இந்தியாவின் பல பாகங்களில் பல இயக்கங்களும் சங்கங்களும் தோன்றியுள்ளன. ஆதிகாலத்தில் இந்திய மாணவர்களின் நிலை எவ்வாறு இருந்தது, பிற்காலத்தில் அந்த நிலை எவ்விதம் மாறுபட்டது என்பன போன்ற விஷயங்கள் நாம் அவசியம் அறிந்துகொள்ளத்தக்கவையாகும். இந்திய மாணவர் சரித்திரத்தை, இதிகாச புராண காலம், இடைக்காலம், பிற்காலமென மூன்ருகப் பகுத்துக்கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. இதிகாசபுராண காலம்

இராமாயண மகாபாரத காலம் முதல் கி. பி. 11-ஆம் நூற்ருண்டு முடிய இதிகாச புராண காலமாகும். அதனை ஆதிகாலமென்றும் கூறலாம். அக்காலத்தில் மாணவர்கள் சிறந்த நிலையில் இருந்துவந்தார்கள்; அதனுல் நாடும் சிறப்புற்றிருந்தது.

அக்காலத்தில் ஒரு மாணவனுக்கு ஏழு எட்டுப் பிராயமானவுடன் அவன் ஓர் ஆசிரியரிடம் சேர்ப்பிக்கப்பெற்று வந்தான். அவன் பல வருஷங்கள் குருவுடன் வாசம் செய்து வர வேண்டியவனானான். அவனுடன் அவனைப் போன்ற வேறு மாணவர்களும் அந்த ஆசிரியரிடம் கல்வி பயின்று வந்தார்கள். மாணவர்கள் தங்களுடைய பெற்றோர்களைப் பிரிந்து குருவினிடமிருந்து கல்வி கற்று வந்தமையைக் குருகுல வாசம் என்பார்கள். தேவகுலம் என்பது தேவாலயத்தைக் குறிப்பதுபோல், குருகுலம் என்பது குருவின் உறைவிடத்தைக் குறிக்கும்.

ஆதிகாலத்து மாணவர்களுக்கு அமைந்த ஆசிரியர்கள் ஆடம்பர வாழ்க்கையில் வெறுப்புள்ளவர்கள்; நல்ல பழக்கங்களை உடையவர்கள். காடுகளிலும் மலைகளிலும் நதி தீரங்களிலும் இயற்கையன்னை கொலு வீற்றிருக்கும் தனியிடத்தில் அவ்வாசிரியர்கள் வசித்து வந்தார்கள். அதனால் தூய காற்றும் நீரும் நிலனும் மாணவரின் உடல் வளர்ச்சிக்கு ஏற்றவையாக அமைந்திருந்தன.

இயற்கை வழியில் கல்வி பயின்றுவந்தமையால் மாணாக்கர்களின் அறிவு கூர்மையாக இருந்தது. முற்பகுதி யெல்லாம் மனனஞ் செய்வதற்கும் பிற்பகுதி ஆராய்ச்சி செய்வதற்கு

மாகக் குருகுல வாசம் அமைந்திருந்தது. மாண வர்கள் தங்கள் ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொண்டவற்றைவிடக் கேட்டுக் கொண்டவை யும், அவருடைய நடையைக் கண்டு நேரில் அறிந்துகொண்டவையும் மிகப் பலவாம்.

ஒவ்வொரு மாணவனும் தன் தன் வசதி களைத் தானே தேடிக்கொள்ளுமாறு ஆசிரியர் கள் மாணவர்களைப் பழக்கிவந்தார்கள். பிள்ளை கள் தினந்தோறும் அருகிலுள்ள கிராமங்களுக் குச் சென்று உணவைப் பிக்ஷையாகப் பெற்றுவருவார்கள். மாணவ நிலையில் பிக்ஷை யெடுப்பது இழிவாகக் கருதப்படவில்லை. மாணவன் பிக்ஷை யெடுப்பது இன்றும் சில சாதியினரிடத்தில் போலிச் சடங்காக உபநய னங்களில் நடைபெற்று வருவதை நாம் காண லாம். எளிய வாழ்க்கையோடு கூடிய இயற்கை நிலையில் ஈடுபட்டிருந்ததனுல் அவர்களுக்கு வேண்டிய பொருள்கள் மிகக் குறைவாகவே இருந்தன. இயற்கைக் காட்சியும், மனமொத்த சகபாடிகளின் கூட்டுறவும், ஆசிரியர்களின் அன்பும், தாங்கள் கற்றுவந்த கல்வி முறையின் அமைப்பும் மாணவர்களுக்கு அளவற்ற மகிழ்ச் சியை யளித்து வந்தன. வீட்டின் நினைவு அவர்க ளைத் துன்புறுத்தவில்லை. தங்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் தாங்களே தேடிக்கொள்ள

வேண்டியவர்களாக இருந்தபடியால் இளமையி லேயே அவர்களுக்குக் காரிய நிர்வாக சக்தி ஏற்பட்டது.

அவர்கள் அறிவுப் பயிற்சியில் மிக்கவர் கள். உடற் பயிற்சியில்அதற்கு இளைத்தவர்கள் அல்லர். நீந்துதல், மல்யுத்தம், சிலம்பம், ஆயு தப்பயிற்சி முதலியவைகள் கல்வியின் ஒரு பாக மாக இருந்து வந்தன. அதனால் குருகுல மாண வர்கள் உடல் வலிமை வாய்ந்தவர்களாகவும் நோயற்றவர்களாகவும் இருந்து வந்தார்கள்.

நகரங்களில் அரசவைகளில் அடிக்கடி பிரசங்கங்கள் நடைபெறுவது வழக்கம். அவற் றிற்குக் குருகுல வாசிகள் தங்கள் ஆசிரியர் களுடன் செல்வதுண்டு. இதனால் பல பெரிய வர்களின் பழக்கமும் உலகாநுபவமும் மாண வர்களுக்கு எளிதில் அமைந்தன.

குருகுல வாசத்தின் இறுதியில் மாணவர் கள் தாங்கள் கற்ற கல்வியை அனுபவத்தில் விசாலப்படுத்திக் கொள்ளத் தேச சஞ்சாரம் செய்துவந்தார்கள். தேச சஞ்சார மின்றி ஒரு மாணவன் மணஞ்செய்துகொள்ளச் சாஸ்திரங் கள் இடந்தரவில்லை. மாணவர் தேச சஞ்சாரம் செய்வது அறவே ஒழிந்துவிட்ட நம் காலத்தில், மணவினைக்கு முன்பு மணமகன் மாணவ வேடத்

தோடு காசியாத்திரை செய்துவருதல் என்ற வழக்கம் மட்டும் இருந்துவருவது மேற்கூறித்த சாஸ்திரங்களின்படி நாம் நடக்கிறோம் என்பதைக் காட்டவேதான். இந்தியாவில் முக்கிய ஸ்தலங்களும் தீர்த்தங்களும் தேசத்தின் பல கோடிகளில் அமைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் என்ன? ஒருகோடியிலுள்ள மக்கள் மற்றொருகோடிக்குச் சென்று உலகஞானம் பெறுவதற்கென்றேயன்றோ! தேச சஞ்சாரத்தை மேற்கொண்டு இக்கால மாணவர்கள் பல சங்கங்களைக்கண்டு தங்கள் கல்வியறிவைப் பெருக்கிக்கொண்டார்கள்; தாங்கள் நேரிற் கண்டவற்றையும், கேட்டவற்றையும், அநுபவித்தவற்றையும் பிற்காலத்தாரும் உணரும்படி சுவடிகளிற் பொறித்து வந்தனர். அவர்கள் ஆராய்ந்து எழுதிவைத்த விஷயங்களையே நாம் இப்பொழுது பாராட்டிப் படித்து வருகிறோம்.

குருகுலங்களைத் தவிர ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் இருந்திருக்கவேண்டும். தமிழர்கள், ஊருக்கொரு பள்ளி இருக்கவேண்டியதன் அவசியத்தைச் சங்க காலத்திலேயே உணர்ந்திருந்தனர் என்பது,

"கணக்காய ரில்லாத ஊரும்......
.................................
நன்மை பயத்த லில"

என்றதனல் அறியப்படும். நூல்களைப் புகட்டும் ஆசிரியர் கணக்காயரெனப்படுவர். அக்காலத்தில் பள்ளிகளைத் தவிர்த்து ஒவ்வோரூரிலும் சிலம்பக் கூடங்களுமிருந்தனவென்பதற்கும் சில சான்றுகள் உள.

மேற்கூறியவற்ருல் மாணவநிலை ஆதிகாலத்தில் சிறந்து விளங்கியதாக அறிந்துகொள்ளுகிறேம்.

## 2. இடைக்காலப் பகுதி

கி. பி. 11-ஆம் நூற்றூண்டுக்குமேல் ஏறக்குறைய, கி. பி. 1850 வரையில் உள்ள காலம் மத்தியகாலம் எனப்படும். இந்திய சரித்திரத்தைக் கூர்ந்து நோக்குவார்க்கு இம்மத்தியகாலப் பகுதியின் தொடக்கத்தில் வட இந்தியாவில் நிலையான வல்லரசு ஒன்றுமில்லை என்பது புலனகும். தென்னுட்டில் அரசர்களுள் ஒருவரோடொருவர் போர் செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துவிட்டமை தெரியவரும். சிலவிடங்களில் குடிகொண்ட அராஜரிகத்தாலும், வேறு சிலவிடங்களில் புறநாட்டாரின் படையேற்றங்களாலும், உள்நாட்டுக் குழப்பங்களாலும் இந்தியாவில் கல்வி முறை முற்றிலும் மாறுதலடைந்தது.

குருகுலங்களை ஆதரிக்கத்தக்க சிறந்த அரசர்கள் இல்லாமற் போனார்கள். அவைகள் நிறுவப்பெற்றிருந்த காடுகள் முதலியவை கொள்ளைக்கூட்டத்தாரின் தாயகமாயின. தேச சஞ்சாரம் செய்வதில் பல இடையூறுகள் சூறுக் கிட்டன. பலவிதமான குழப்பங்களுக்கிடை யில் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை விட்டு நெடுங்காலம் பிரிந்திருக்க விரும்பவில்லை. இந் நிலையில் குருகுலங்கள் வீழ்ச்சியுற்றமை வியப் பன்று.

இம் மத்திய காலத்தின் இடையிடையே இந்தியாவின் சில பாகங்களில் இரண்டொரு தலைமுறைவரையில் சில அரசுகள் புகழ் படைத்து ஓங்கி யிருந்தன. அச்சமயங்களில் எல்லாம் அங்கங்கே அந்த அந்த அரசாங்க பாஷை சம்பந்தமான கல்விமட்டும் விருத்தி யாயிற்று என்றாலும் பொதுவாக மாணவ உல கம் பழைய சிறப்பை இழந்துகொண்டு வந்த தாகவே கூறவேண்டும். இக்காலத்தில் அறி வுப் பயிற்சியும் உடற்பயிற்சியும் வெவ்வேறாகப் பிரிந்துபோயின. இவற்றுள் ஒன்றைப் பெறு வோர்க்கு மற்றொன்று இல்லாமற் போயிற்று.

நாட்டில் கலைவளம் குன்றி வருவதை யும் மாணவநிலை நாளுக்கு நாள் தேய்ந்து

வருவதையும் கண்ட பலர் மாணவ நிலையைத் தம் காலத்திற்கு ஏற்பச் சிறிதளவு செப்பனிட முன் வந்தனர். இவ்விதத் தொண்டை முக்கியமாகக் கோவில்களும் மடங்களும் கைக் கொண்டன. முக்கியமான ஒவ்வொரு கோவிலைச் சார்ந்தும் மடத்தைச் சார்ந்தும் ஒவ்வொரு வித்தியா நிலையம் இருந்துவந்தது. அதில் பல மாணவர்கள் இலவசமாகக் கல்வி பயின்று வந்தனர். அந்த நிலயங்களின் சார்பிலேயே மாணவர்களுக்கு ஊண் உடை உறைவிடமும், பிறவும் வழங்கப்பட்டன. உடல் உழைப்பின்றிச் சுலபத்தில் மாணவர்கள் அறிவு சம்பந்தமான கல்வி ஒன்றை மட்டும் பெற்று வந்ததனால் அவர்களுக்குச் சுகபோகங்களிலே அதிக விருப்பம் தோன்ற, மெய் வருந்தி உழைத்துச் சாப்பிட வேண்டுமென்பதை அவர்கள் அடியோடு மறந்துவிட்டனர்.

ஒரு பாலுள்ள மாணவர்கள் மற்றொரு பாலுள்ள மாணவர்களுடன் கலந்து பழகச் சமயங்களும் வசதிகளும் வாயாமையினால் ஒரு கூட்டத்தாருக்குத் தாம் பழகிவந்த மற்றொரு கூட்டத்தார் மேல் வெறுப்பு இயற்கையாகத் தோன்றிவிட்டது. தாம் எழுதும் நூல்களுள் ஒருவர் மற்றொருவர் கொள்கையை இகழ்ந்து எழுதத் தொடங்கியது இக்காலத்திலிருந்தே

அதிகமாயிற்று. இருந்தாலும் நூற்கல்வி இக் காலத்தில் பல புதுமுறைகளைப் பெற்று வளர்ச்சி அடைந்ததாகவே கூறவேண்டும். இவ் வித வளர்ச்சிக்குக் காரணமான மடங்களையும் கோவில்களையும் நாம் போற்றவேண்டும்.

காலம் செல்லச் செல்ல நாட்டின் பலவிடங் களில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஏற்பட் டன. பட்டிகளில் ஆடுகளை அடைத்து வைப் பதுபோல் செயற்கை வெம்மை செறிந்த கட்ட டங்களில் பல மாணவர்களை அடைத்துவைத் துக் கல்வி கற்பிப்பதே இப்பள்ளிகளின் நோக்கமாகும். தாங்கள் பெறும் கல்வியினிட மாவது, அது கற்பிக்கப்படும் முறையிலாவது மாணவர்களுக்கு விருப்பம் செல்லவில்லை. ஆசி ரியர்கள் உடலுக்கு வேலை தராமல் காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரையில் பட்டி களில் மாணவரை அடைத்துவைத்த காரணத் தினல் அம் மாணவரின் வாழ்க்கை துக்ககர மாயிற்று. பள்ளிக்கூடங்கள் அவர்களுக்குச் சிறைக்கூடங்களாகவே தோன்றின. பல மாண வர்கள் படிப்பினிடத்து வெறுப்பைக் காட்டத் தொடங்கினர். அதன் காரணமாக ஆசிரியர் கள் தண்டக் கொடுமையையும் கொடிய பிற அடக்குமுறைகளையும் கைக்கொள்வாரா யினர். ஆசிரியர்பால் மாணவர்கள் இன்ன

படி ஒழுகவேண்டுமென்பதை மாணவர்களே அறிந்துகொள்வது போக இன்னவாறுதான் ஒழுகவேண்டுமென்று மாணவர்கள் சில வகைகளால் வற்புறுத்தப்பட்டார்கள். '**கோலாடக் குரங்காடும்**' என்றது போன்ற பழமொழிகள் இக்காலத்திற்றான் தோன்றின போலும்! அன்பு காரணமாகவன்றி அச்சம் காரணமாகவே மாணவர்கள் ஆசிரியர்களுக்குக் கீழ்ப்பட்டு வந்தனர்.

ஆதிகாலத்தில் மிகவும் உன்னதமாக இருந்த மாணவநிலை இவ்விதமாக இடைக்காலத்தில் இரங்கத்தக்க கேவல ஸ்திதிக்கு வந்துவிட்டது.

## 3. பிற்காலப் பகுதி

ஆங்கிலேய அதிகாரம் இந்தியாவில் நிலைபெற்றபிறகு கல்வியில் ஒரு புதிய யுகம் ஏற்பட்டது என்னலாம். ஆங்காங்கே சர்வகலா சாலைகள் (பல்கலைக்கழகங்கள்) நிறுவப்பட்டன. ஒரு சர்வகலாசாலையைச் சார்ந்து பல்லாயிரம் பள்ளிகள் தோன்றியுள்ளன. இவற்றிற் படித்துவரும் மாணவர்களுக்கு ஆங்கிலமும் தாய்மொழியும் வேறு சில பாடவகைகளும் கற்பிக்கப்படுகின்றன. அச்சுயந்திரமும் பத்திரிகை

களும் கல்வியைக் கிராமந்தோறும் பரப்புதற்குரிய சாதனங்களாயின.

இந்த நிலையிலும் குறைகள் இல்லாமற் போகவில்லை. ஆங்கிலப்பள்ளிகளில் படித்தவர்களுக்குச் சுலபமாக உத்தியோகங்கள் கிடைத்துவந்ததை எண்ணிப் பெற்றோர்கள் வறிய நிலையில் இருந்தபோதிலும் மிகவும் சிரமப்பட்டுத் தம் பிள்ளைகளை ஆங்கிலக் கலாசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர். இப்பிள்ளைகளுக்கு யோக்கியதாபத்திரம் வாங்கிக் கொடுக்கும் வகையில் ஆசிரியர்கள் பிரயாசை எடுத்துக்கொண்டனர். அறிவு வளர்ச்சிக்குரிய கல்வியைப் பெறும் சந்தர்ப்பம் அமைந்தும் பலர் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இவ்விதமாகவே வருஷந்தோறும் பல்கலைக் கழகங்களிலிருந்து பட்டதாரிகள் வெளிவந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் யாவருக்கும் நாட்டில் உத்தியோகம் அகப்படுவதில்லை. கல்வி சம்பந்தமாகவன்றிப் பிறவழிகளில் உழைக்க இம்மாணவர்கள் திறமையற்றவர்களாக இருக்கின்றனர். திறமைவாய்ந்த சிலரும் வேறு துறைகளிற் புகுவது தமது நிலைமைக்கு இழிவென்று கருதுகின்றனர். வயிற்றுப் பிழைப்புக்குத்தான் கல்வி என்று கருதிவந்ததனால் வந்த குறைவே இது.

இதே சமயத்தில், கற்பிப்பதில் பல புதிய முறைகள் தோன்றியுள்ளன. மாணாக்கர்கள், விஷயங்களைத் தாங்களே சோதனை செய்தோ நேரிற்கண்டோ தெரிந்து கொள்வதுதான் கல்வியென்றும், ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் துணையாக நின்று உபாயங்களைக் கற்பிக்க வேண்டுமென்றும் பலர் எண்ணுகின்றனர். ஆதிகால மாணவர்கள் பலவிடங்களுக்குச் சென்று விஷயங்களை நேரிற் கண்டு தெளிவடைந்ததுபோல இவர்களும் தேசசஞ்சாரம் செய்யவேண்டு மென்றும், எல்லோரும் தேச சஞ்சாரம் செய்வது இயலாதகாரியமாதலால் பள்ளிகளை ஒட்டிப் பொருட் காட்சிச்சாலைகள் அமைக்கப்படவேண்டு மென்றும், ஒளி விசித் திரப் படங்கள் சினிமா முதலியவற்றின் துணையும் கல்வி அபிவிருத்திக்கு அவசியமென்றும் பலர் கிளர்ச்சி செய்துவருகின்றார்கள். குருகுல வாசத்தில் மாணவர்கள் ஆசிரியருடன் இருந்து வந்ததுபோல் தற்கால மாணவரும் ஒழுக 'ஹாஸ்டல்' வாழ்க்கையை வற்புறுத்துவோர் பலராவர். ஆதிகால மாணவர்கள் தங்கள் புத்தியை மட்டுமன்றிக் கையையும் கண்ணையும் பயன்படுத்தி வந்ததுபோல் இக்கால மாணவர்களும் நடக்கவேண்டி அவர்களுக்குப் பள்ளிகளில் தொழிற் கல்விப்பயிற்சி (Manual Training)வேண்டுமென்று ஏற்பாடுகள் நடந்து

வருகின்றன. அக்கால மாணவர்களுக்கு இருந்தது போல உடற்பயிற்சிக்கு வேண்டிய வசதிகளை இக்கால மாணவர்களும் பெறப் பல இயக்கங்கள் தோன்றியுள்ளன.

ஆங்கிலக் கல்வியால் நம் நாட்டில் முக்கியமாக ஒரு குறை இருந்துவருகின்றது. நம் தேசத்தில் வழங்கிவரும் ஊண், உடை, வழக்கங்கள் முதலியவற்றை யெல்லாம் தாழ்ந்தனவாகப் பாவிக்கும் ஒரு தன்மை எப்படியோ மாணவர்களிற் பலருக்கு ஏற்பட்டுவிடுகின்றது. அந்நிய நாட்டுப் பழக்க வழக்கம் முதலியவற்றில் தமக்கிருக்கும் காதலினால் இவர்கள் தங்கள் கொள்கைகளைத் தம்மைச்சார்ந்த பாமரருக்கும் பரப்பி வருகின்றனர். இதனால் எத்துணையோ தீமைகள் ஏற்படுகின்றன. நல்லவேளையாகத் தேசபக்தர்கள் பலருடைய நல்லமுயற்சியின் பயனாக மாணவர்களின் இக்கொள்கைகள் எல்லாம் மெல்ல மெல்ல ஒடுங்கி வருகின்றன.

மேல் வகுப்புக்களில் நாட்டுமொழியைத் தவிர மற்றப் பாடங்கள் எல்லாம் ஆங்கிலத்திலே போதிக்கப்பட்டு வருகின்றன. ஒரு மாணவன் கீழ்வகுப்புக்களில் தன் தாய்மொழியில் அறிந்துகொண்ட விஷயத்தையே சிறிதளவு கூடுதலோடு மறுபடியும் மேல்வகுப்புக்களில்

ஆங்கிலத்திற் கற்கவேண்டியவனுகின்றான். இதனுல் எவ்வளவோ காலம் வீணுகின்றது. தன் தாய்மொழியிலேயே அவன் கலைகளையெல்லாம் கற்பதனுல் இப்பொழுது கற்றுவருவதைப் பார்க்கிலும் இன்னும் அதிக விஷயங்களை வெகு நன்றாகச் சிரமமின்றிக் கற்றுக்கொள்ளக் கூடும்; காலமும் வீணுகாது. ஆங்கிலத்தைத் தவிர வேறு பாடங்கள் எல்லாம் உயர்தரப் பாடசாலைகளில் தாய்மொழி வாயிலாகவே புகட்டலாம் என்று சில சர்வகலாசாலைகள் அநுமதி அளித்திருக்கின்றன. பள்ளிகளின் தலைவர்களிற் பலர் அம்முறையைத் தம் பள்ளிகளிற் புகுத்த இன்னும் மயங்குகின்றார்கள். எப்படியும் சில ஆண்டுகளில் இந்நாட்டுப் பள்ளிகள் தாய்மொழி மயமாய்விடும் என்பதில் ஐயமில்லை.

## முடிவுரை

தற்கால மாணவ நிலையை ஆதிகால மாணவ நிலைக்குச் சமமாக உயர்த்த முயற்சிகள் நம் காலத்தில் நடந்து வருகின்றன வென்று கூறினேம். 'எத்துறைகளில் மாணவர் முன்னேற்ற மடையவேண்டும்? அவர்களின் உரிமைகளும் கடமைகளும் என்ன?' என்பவற்றை ஆராய்வாம்.

மாணவர்களின் மனம் ஒரு நிலையின தன்று. இன்று ஒருவர் உடற்பயிற்சியைப் பற்றிப் பேசுவதைக் கேட்டால் அவர்கள் சில நாள் உடற்பயிற்சியில் ஈடுபடுவார்கள். வேருெருநாள் மற்ருெருவர் பொதுஜன சேவை யைப்பற்றிப் பேசினுல் அதில் சிலநாள்வரையில் ஈடுபடுவார்கள். அவர்கள் மனம் ஒன்றிலும் நிலையாகஊன்றி நில்லாது. நம்மாணவர்களுக்கு ஒரே நோக்கம் வாழ்வின் குறிக்கோளாக அமைவதில்லை.

பருவத்திற் கேற்ற செயல் மாணவர்பால் இலங்கவேண்டும். மரங்கள் தளிர்த்துப் பூத் துக் காய்த்தபிறகே கனிய ஆரம்பிக்கின்றன. அதுபோல் இவர்களும் படிப்படியாகத்தான் உயரமுடியும். நினைத்த மாத்திரத்தில் ஆகா யத்தில் பறந்துவிடமுடியாது. பெரியவர்களைப் போல் சிறுபிராயத்தில் அதிகாரம் செய்ய விரும்புவது புலியைக்கண்டு பூனை சூடுபோட்டுக் கொண்ட கதையாக முடியும்.

எதையும் நிர்வகிக்க வேண்டுமென்பதிலும் பிறர் தம்மைக்கண்டு மெச்சவேண்டுமென்பதி லும் மாணுக்கர்களுக்கு அதிதீவிரமான எண் ணம் இருந்துவருகின்றது. அதை விருத்தி செய்யும் பொருட்டுச் சில முக்கிய காரியங்களை

அவர்களிடம் ஒப்பித்து நடத்தச் செய்தால் அவர்கள் அவற்றை ஒழுங்காகச் செய்வார்கள். 'எட்டாள் வேலையைச் சிட்டாள் செய்யும்' என்பது கிராமிய வழக்கு. மாணவர் சங்கங்கள் விளையாட்டுக்கள் முதலியவற்றை அவர்களே நடத்தும்படி ஆசிரியர்கள் அநுமதித்தால் மாணவர்களுக்குக் காரியநிருவாகசக்தி விரைவில் ஏற்பட்டுவிடும்.

தற்கால மாணவரிடம் பலகுறைகள் இருக்கின்றன. அவற்றை அவர்கள் நீக்கிக்கொள்வது தங்கள் மேன்மைக்கு வழிகோலுவதாகும். எடுத்தவற்றிற்கெல்லாம் கோபம், ஆலோசியாமல் காரியங்களில் புகுந்துவிடுதல், காரியங்களைச் செய்வதில் உடனுக்குடன் கைமேல் பலனை வேண்டல், தாங்கள் செய்தவையெல்லாம் சரியென்ற நினைவு, சிநேகபாவத்தில் அடிக்கடி மாறுதல் இக்குறைகளை எல்லாம் நம் மாணவ உலகம் என்று விட்டொழிக்குமோ!

மனத்திற்றோன்றும் அபிப்பிராயங்களைச் சித்திரங்கள் மூலமாகவோ குறும்புப்பாட்டுக்கள் மூலமாகவோ எழுதிக்காட்டுவதில் மாணவர்களுக்கு விருப்பமதிகம். இப்பயிற்சியை அவர்கள் தீயவழிகளிலே பெரியோர் அறியாமல் செய்து வருவது வழக்கம். அவ்வழக்கத்தை நல்ல வழிகளிலே செலுத்தும்படி செய்பவர்கள்தோன்று

வார்களேயானல் நம் மாணவர்கள் எவ்வளவோ மேன்மைக்கு வருதல் கூடும். அவர்கள் எழுதும் செய்யுட்கள் பிழையுள்ளனவாகத் தோன்றினும் நாம் மாணவர்களை ஊக்கிவருவோமானல் பிற்காலத்தில் செய்யுள் செய்யும் பழக்கம் அவர்களுக்கு எளிதாகிவிடும்.

சில புத்தகங்களை மட்டும் பாடமாகவைத்து வருஷ முழுவதும் அவற்றை வாசிக்கச் செய்வதால் அவர்களுக்குப் புத்தகத்தில் வெறுப்பேற்பட்டு விடுகின்றது. பலவிதமான புத்தகங்களை வகுப்பில் தொகுத்துவைத்து மாணவரே தம் இஷ்டம்போல் அவற்றை உபயோகிக்க அநுமதிக்கப் படுவார்களேயானல் அவர்கள் புத்தகப் பிரியர்களாய் விடுவார்கள்.

இவ்வாறு மாணவர்களுடைய மனநிலையையும், அறிவாற்றலையும் நாட்டுக்கு நலம்புரியும் வழியில் திருப்புவதே ஆசிரியர்களது முதற் கடமையாகும். இது நன்கு நடைபெறும்படி பிறரும் துணைபுரிதல் வேண்டும். இத்தகைய முயற்சிகளால் நம்நாட்டுப் பழைய மாணவர்கள் பெற்ற பயனேடு புது உலகத்தால் உண்டாகும் பயன்களையும் இனிவரும் உலக மக்களாகிய மாணவர்கள் பெறுவார்களென்பதில் ஐயமில்லை.

# பாணர்கள்

## 1. தமிழரின் சாதிப்பிரிவு

தமிழ் மக்கள் மிகப் பழமையானவர்கள். அவர்கள் வேட்டுவர், ஆயர் மறவர், உழவர், வலைஞரென ஐவகைப் பிரிவினராக இருந்தனர். இப்பிரிவு குறிஞ்சி முதலிய திணைகளால் உண்டானது. இவர்களைத் தவிரக் கீழ்மக்களாகக் கருதப்பட்டவர்களும் உண்டு. அவர்கள் பாணன், பறையன், துடியன், கடம்பன் முதலிய பல பிரிவினரென்று தெரிகிறது.[1]

## 2. கூத்தோடு இயைபுடையவர்கள்

பழைய காலத்திலே தமிழ்நாட்டிலே கூத்துக்கள் நடப்பதுண்டு. அக்கூத்துக்களிலே வேடந்தரித்துக் கொள்ளுகிறவர்கள் கூத்தர் எனப்பட்டனர். அவர்கள் வேடந்தரித்துக் கொண்டு ஆடுதலையும் பாடுதலையும் ஒருங்கே மேற்கொண்டிருந்தனர்.

---

1. புறநானூறு, 335

**விறலியர்** என்ற பெண்பாலாரும் கூத்துக்களை ஆடிவந்ததாகத் தெரிகிறது. விறல் என்பது மெய்ப்பாடு. அது மனத்துக்குள்ளே நிகழும் தன்மை புறத்தே தோன்றும்படியாக உடலினிடத்தே காணப்படும் குறிப்பு. வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம் உருத்திரம், நகை என்னும் எட்டுவகை மெய்ப்பாடுகளும் தோன்ற நடித்தலால் அவர்கள் விறலியர் என்று வழங்கப்பெற்றனர்.

**பொருநர்** என்ற வேறொரு பிரிவினரும் இருந்தனர். பொருநர் என்ற சொல் 'ஒருவர் போல வேடந்தரித்துக் கொள்ளுகின்றவர்' என்ற பொருளில் வழங்கியபோதிலும் அவர்கள் வேடந்தரித்துக் கொண்டு ஆடியதாக எங்கும் காணப்பெறவில்லை. உரை யாசிரியர்கள் எல்லாம் இச்சொல்லுக்கு, 'தடாரிப்பறையைக் கொட்டுவோர்' என்றே பொருளெழுதிச் செல்கின்றனர். அவர்கள் தடாரிப்பறை கொட்டுதலைப்பற்றிய செய்திகளைப் பல நூல்களிலே காணலாம். பாடுந்தொழிலும் அவர்களுக்கு உண்டென்று தெரிகிறது. அதனால் பொருநர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோரென மூவகைப்படுவர்.

இவர்களை அல்லாமல் **பாணர்** என்ற பிரிவினரும் இருந்தனர். பாணரும் விறலியரும் கூத்தருடனே சேர்ந்துகொண்டு சஞ்சாரம் செய்துவருவதும் உண்டு.[1] தொல்காப்பியத்தில்,

"ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

என்ற அடிகளுக்கு நச்சினார்க்கினியர் 'ஆடன் மாந்தரும், பாடற் பாணரும், கருவிப் பொருநரும், இவருட் பெண்பாலாராகிய விறலியு மென்னும் நாற்பாலாரும் தாம்பெற்ற பெருஞ் செல்வத்தை எதிரே வந்த வறியோர்க்கு அறிவுறுத்தி அவரும் ஆண்டுச் சென்று தாம் பெற்றவை யெல்லாம் பெறுமாறு கூறிய கூறுபாடும்' என்று பொருள் கொள்ளுகிறார். கூத்தர், பாணர், பொருநர், விறலியர் இவர்கள் நால்வருக்கும் அவர் கொடுத்துள்ள அடைமொழிகளால் இவர்கள் கூத்தோடு தொடர்புடையவர்களென்பது தெரியவருகின்றது. இந்நால்வரில் பாணரைப் பற்றிய ஆராய்ச்சியே இக்கட்டுரையாகும்.

---

1. மலைபடுகடாம், 40—46.

## 3. பாணர் என்ற சொல்லின் பொருள்

பாணர் என்ற சொல் பாண் என்ற பகுதியி னின்றும் தோன்றியது. பாண் என்பது பாட்டு; அது பண் என்பதன் அடியாகப் பிறந் தது. பாட்டுப் பாடுதலைத் தம் தொழிலாகக் கொண்ட ஓரினத்தவரின் சாதிப் பெயராகப் பாண் என்ற சொல் வழங்கலாயிற்று.[1] எனவே பாணர் என்பதற்குப் பாடுவோர் என்பது பொருள். இச்சாதியாரில் ஆண்மகன் பாணன் பாண்மகன் என்றும் பெண்மகள் பாடினி, பாட்டி, பாணிச்சி, பாண்மகள், விறலி என்றும் வழங்கப்படுவர்.

## 4. பாணர் கீழ்மக்களே

பாணர்கள் கீழ்மக்கள் என்பதனைப் புலப் படுத்தப் பல ஆதாரங்கள் உண்டு. இவர்கள் தாழ்ந்தவராகக் கருதப்பட்டு வந்த காரணத் தால் பாண் என்ற சொல் 'தாழ்மை' என்ற பொருளில் நூல்களிற் புகுந்துள்ளது. ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள், "பாணே பேசி"[2] என்று எடுத்தாளுகிறார். சீவக சிந்தாமணி ஆசிரியர், "பாண் செய்தது" என்றும்,

1. நன்னூல், சூ. 211, உரை.
2 திருவாசகம், சதகம், 84.

"பாண்மைச் சொல்" என்றும் கூறுகிறார். 'பாண் செய்தல், என்பதற்கு நச்சினார்க்கினியர், 'தாழ்ச்சி செய்தல்' என்று பொருள் கொண்டுள்ளார்.

பாண்சேரி புறநகரிலுள்ள ஒரு சேரி என்று மதுரைக்காஞ்சி கூறுகிறது. தீண்டத் தகாதார் புறச் சேரியில் (ஊர்க்கு வெளியே ஒதுக்குப் புறமாக) வசித்து வருதலை நாம் இன்றும் பலவிடங்களிற் காண்கிறோம்.

இவர்கள் இசைப் பயிற்சியில் வல்லவர்களாக இருந்தும் கோவில்களில் அநுமதிக்கப் பெறவில்லை. அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான **திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனு**ரும் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான **திருப்பாணாழ்வார்** என்பவரும், பாணர் வகுப்பினரே. இவர்களுடைய சரித்திரத்தை உற்று நோக்கும்போது பாணர்கள் கீழ்ச்சாதியாரென்றும் தீண்டத்தகாதாரென்றும் தெரிந்து கொள்ளுகிறோம்.

தென்னிந்திய சாதிகளும் வமிசங்களும்' (Castes and Tribes of South India) என்ற ஆங்கில மொழியிலுள்ள ஒரு நூலால், இக்

காலத்தில் மலையாளத்தில் பாணர் என்ற ஒரு பிரிவினர் வாழ்ந்து வருவதாகவும் அவர்கள் இழிகுலத்தவராகக் கருதப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

## 5. பாணரின் வகை

பாணர்களில் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் முதலிய பலவகையினர் உண்டு. இசைப்பாணர்என்பவர்கள் வாய்ப்பாட்டுப் பாடுகின்றவர்களோ இசைக் கருவிகளைக் கொண்டு இசைப்பயிற்சியால் சீவிக்கின்றவர்களோ என்று நினைக்கவேண்டி யிருக்கிறது. மண்டைப் பாணர் பிச்சை யெடுத்து வாழ்பவர்கள். மண்டை என்ற சொல் பிச்சைப்பாத்திரம் என்ற பொருளில் வழங்கி வந்துள்ளது. யாழ்ப் பாணர்கள் யாழைக் கருவியாகக்கொண்டு வாழ்பவர்கள். இவர்கள் பெரும்பாணரென்றும் சிறுபாணரென்றும் இருவகைப் படுவர். இவர்கள் கையிலுள்ள யாழினது உருவத்தின் பெருமை சிறுமைகளால் இப்பெயர் பெற்றனர் போலும். சிறுபாணாற்றுப்படையிலே கூறப்பட்ட பாணன் ஒருவன் சிறியயாழை யுடையவனென்றும், பெரும்பாணாற்றுப்படையிலே கூறப்பட்ட பாணன் பெரிய யாழை உடையவனென்றும்

அந்நூல்களில் குறிப்பிடப் பெற்றிருப்பது இங்கே நோக்கத்தகுந்த தொன்றும்.

## 6. பாணரது தொழில்

இசைப் பயிற்சியினால் ஐந்திணை மக்களையும் மகிழ்வித்து அவர்கள் தரும் ஊதியத்தால் வாழ்தலும் மீன் பிடித்தலும் பாணர்களுக்கு முக்கியமான தொழில்களாம்:

யாழ்வாசிப்பதில் பாணர்கள் மிகவும் வல்லவர்கள். தமிழ் நாட்டாரின் யாழ் வேறு; வடமொழியாளர் கூறும் வீணை வேறு:

"வேய்ங்குழல் விளிகொள் நல்யாழ்
வீணையென் றிணைய நாண"

(கம்பராமாயணம், கிட். அரசி. 3),

"குழலும் வீணையும் யாழுமென் றிணையன குழைய
மழலை மென்மொழி கிளிக்கிருந் தளிக்கின்ற மகளிர்"

(கம்பராமாயணம் ஊர்தேடு படலம், 6),

"போர்வைத்தோல் விசிவாரென்
றிணையனவும் புகலுமிசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கு நிலைவகையில்
சேர்வுற்ற தந்திரியுந் தேவர்பிரா னர்ச்சனைகட்
கார்வத்தி னுடன்கோரோ சனையுமிவை யளித்துள்ளார்"

(பெரிய புராணம், திருநாளைப். 14)

என்பவற்றால் மேற்கூறிய விஷயம் தெளிவாகிறது. யாழினுடைய பலவேறு உறுப்புக்களும், யாழின் இலக்கணங்களும், பலவகைப்பண்களும், அவற்றைப் பாடுதற்குரிய கால வரையறை முதலியனவும், தனித்தமிழிலே யிருந்த இசைநூல்களும் இன்னவையென்பதைப் பண்டைஉரையாசிரியர்கள் காட்டியுள்ள மேற்கோள் முதலியவற்றால் நாம் தெரிந்து கொள்ளுகிறோம். இவற்றால் பண்டைய நாளில் தமிழ் நாட்டில் இசைப் பயிற்சி உன்னத நிலையை அடைந்திருந்ததென்று தெரிகிறது. ஒரு நாட்டின் சிறப்புக்கு வித்தகக் கலைகள் (ஓவியம் சங்கீதம் முதலிய நுண்கலைகள்) இன்றியமையாதன. அவற்றுள் தலையாயது இசையே. அத்தகைய சங்கீதத்தைப் பாணர்கள் தங்களுடைய தொழிலாகக் கொண்டு காப்பாற்றி வந்தனர்.

அவர்களது பாட்டுக் கேட்டோரை அகப்படுத்தும் இயல்புடையது. ஒருவன் யாழ்வாசித்தலைச் சிறப்பிக்குமிடத்து முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப் படையில்,

"ஆறலை கள்வர் படைவிட அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை"

என்று கூறியிருக்கிறார். இதற்கு நச்சினார்க்கினியர், 'வழியை அலைக்கின்ற கள்வர் தம்

கையிற் படைக்கலங்களைக் கைவிடும்படி அருளினது மாறுகிய மறத்தினை அவர்களினிடத்து நின்று பெயர்க்கும் மருவுதலினிய பாலையாழ்', என்று பொருள் கூறியிருக்கிறார்.

பாணர்கள் தங்கள் யாழைத் தெய்வமாகப் போற்றிவந்தார்கள். யாழே அவர்களுக்குத் தெய்வமென்பதும் அவர்கள் தங்கள் யாழின் மேல் சூள்கூறி உண்மையைப் புலப்படுத்துவதுமுண்டு என்பதும்[1] தெரிய வருகின்றன.

தமிழ்மக்களில் தலைவன் தலைவியர்கள் தங்கள் குழந்தைகளுடன் இருந்துகொண்டு பாணனுடைய பாட்டைக் கேட்டு மகிழ்ந்து வருவது வழக்கம்.

இவர்கள் மீன்பிடித்தலையும் தம் தொழிலாகப் பெற்றிருந்தனர் என்பது கீழ்வருவனவற்றால் விளங்கும்.

"...............................பாணன்
சூழ்கழி மருங்கி ணிரை கொளீஇச்
சினைக்கயல் மாய்க்குந் துறைவன்"

(ஐங்குறு நூறு, 111)

---

1. கலித்தொகை 71 : 13-4.

"கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண் கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை"

(பெரும்பாணாற்றுப் படை, 284 - 7)

பாணர் பிடித்துக் கொணரும் மீனைப் பாணிச்சியர்கள் விற்றுவந்தார்கள். அவர்கள் மீன்களை விற்று அதற்கு விலையாக நெல் முதலிய தானியங்களைப் பெற்று வந்தார்கள்.

"வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுண் மனையாள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கு மூர"

"அஞ்சி லோதி யசைநடைப் பாண்மகள்
சிறுமீன் சொரிந்து பன்னெற் பெறாஉம்
யாண ரூர..............."

(ஐங்குறு நூறு, 48, 50)

என்பவை இங்கே நோக்கத்தக்கன.

பாணரென்பது பிற்கால நூல்களில் தையற்காரர்களுடைய பெயராகவும் வழங்குகின்றது.

'தைமாசி பங்குனிமாதம்' என்றதொடரைக் காளமேகப் புலவர் தொனியாக அமைத்துக் கூறிய வெண்பாவில் தையல் தொழிலையுடைய பாணர் கூறப்பட்டுள்ளனர்.

"பாணர்க்குச் சொல்லுவதும் பைம்புனலை மூடுவதும்
தாணு உரித்ததுவும் சக்கரத்தோன்—ஊணதுவும்

எம்மானை யேத்துவது மீசனிடத் துஞ்சிரத்தும்
தைமாசி பங்குனிமா தம்''

என்பது அது. ஈற்றடியை, தை, மாசு, இபம், கு, உனி, மாது, அம் எனப் பிரித்து நிரனிறை யாகப் பொருள் கொள்ளவேண்டும்.

[இபம் - யானை. கு- பூமி. உனி - நினைத்து. மாது - உமையவள். அம் - ஜலம்; கங்கை. பாணர்க்குச் சொல்வது தை என்ற ஏவலாகும் என்பது இங்கே கருதத் தக்கது.]

## 7. பாணரின் வறுமையும் மன்னரின் ஆதரவும்

ஒரு பாணன் யாழ்வாசித்துக்கொண்டு பரிசிலரை நாடிச்செல்ல அவனுடன் விறலியும் பெரிய கிளையும் தொடர்ந்து செல்வதை நூல்களிலே பரக்கக் காணலாம். ஒரு பெரிய குடும்பத்திலே ஒருவனே பொருளைத் தேடும் விஷயமாகப் பாடுபடுகின்றவன் போல் தோன்றுகின்றது.

இவர்களுடைய வறுமை மிகவும் இரங்கத் தக்கவாறு நூல்களில் வருணிக்கப் பட்டுள்ளது. அக்காலத்தில் தமிழ் நாட்டிலே மிக்க வறியராயிருந்தவர்கள் இப்பாணர்கள்தாம். ஆகையால்

அக்காலத் தமிழ்வேந்தர்கள் இவர்கள் பசி தீர்த்தலையே தம் முதன்மையான கொடையாகக் கொண்டிருந்தனர். தமிழ் நூல்கள் அக் கொடையை ஒரு கடமையாகவே பாராட்டிப் **பாண்கடனிறுத்தல்** என்று கூறுகின்றன.

"..............................ஒன்னார்,
ஆரெயி லவர்கட் டாகவும் நுமதெனப்
பாண்கட னிறுக்கும் வள்ளியோய்''

(புறநானூறு. 203: 9-11.)

என்று ஓர் அரசன் புகழப்பட்டிருக்கிறான். வேறுசில அரசர்கள், 'பரிசிலர் வெறுக்கை, பாணர் நாளவை'[1] எனவும், 'பாண்பசிப் பகைஞன்'[2], 'பாணரொக்கல்'[3] எனவும்புலவர்களால் பாராட்டப் பெற்றுள்ளார்கள்.

அரசர்கள் பாணர்களுக்குத் தரும் பரிசில்களுள் முக்கியமானது பொற்றாமரைப் பூவாம். விறலியருக்கு அவர்கள் பொன்னணிகளை வழங்கிவந்தார்கள். பாணர் பொற்றாமரைச்சூடுதலையும் விறலியர் பொன்னணியையும் முத்துமாலையையும் பெறுதலையும் புறநானூறு, பத்துப்பாட்டு, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களில் விரிவாகக் காணலாம்.

---

1. பதிற்றுப்பத்து 38 : 10. 2. புறநானூறு 180. 3. திருக்கோவையார், 400.

இவர்கள் தங்களால் வைத்துக் காப்பாற்ற முடியாத யானை தேர் முதலியவற்றையும் பரிசிலாகப் பெற்றுவந்தார்கள். அப்பரிசில்களை இன்னவாறு உபயோகித்தல்வேண்டும் என்பதை இவர்கள் அறிந்திருந்தார்கள் என்று நினைப்பதற்கில்லை. குதிரைகள் பூட்டிய தேரைத் தாற்றுக்கோலுடன் பாணர்களுக்கு ஈந்தால் கடுவிசைக்கு இவர்கள் இருத்தலாற்றார் என்று கருதி மன்னர்கள் தாற்றுக் கோலை நீக்கிவிட்டுத் தருவதும், முன்பின் தேரேறும் பழக்கமில்லாத இவர்களை மன்னர்களே நேரில், 'இங்ஙனம் ஏறு' என்று கற்பித்து ஏற்றுவதும் உண்டென்பது,

"கோட்டிற் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
.......................................
பால்புரை புரவி நால்குடன் பூட்டிக்
காலி னேழடிப் பின்சென்று கோலின்
தாறுகளைந் தேறென் றேற்றி"

(பொருநராற்றுப்படை. 163 - 7)

என்பதனால் தெரியவருகின்றது.

பெரியோரை ஏழடி நடந்துசென்று வழியனுப்புதல் ஆன்றோர் வழக்கம். முடியுடைவேந்தர்களால் பாணர்கள் அத்தகைய மரியாதை

யைப் பெற்றிருந்தமை மேலே காட்டிய அடிகளால் தெரிகின்றது.[1]

இவர்கள் வறியவர்களாயிருந்தும் தாம் பெற்றவற்றைப் பிறர்க்கு எளிதில் ஈந்துவிடும் இயல்பினர். இவர்கள் தமக்குப் பரிசிலாக வரும் யானைகளையும் பசுக்கூட்டங்களையும் அவற்றின் மதிப்பை யறியாமல் கள்ளின் பொருட்டுக் கொடுத்துவிடுத லுண்டென்று தெரிகின்றது.[2]

## 8. பாணரும் அகப்பொருட் பகுதியும்

அகப்பொருள் சம்பந்தமான நூல்களில் பாணருடைய செயல்கள் சிலகூறப்பட்டுள்ளன. பாணன் பரத்தையர் வீடுகளிலே அப்பரத்தையர்கள் கூறும் சிற்றேவல்களைச் செய்து கொண்டு இருப்பான்போலும். இவன் பரத்தையர் வீட்டில் யாழ்வாசித்தலுண்டு. பரத்தையர்களைத் தலைவனுக்குப் பழக்கஞ் செய்விப்பவனும் இப்பாணனே. 'யாமழப் பண்ணினூற்

1. பாணபத்திரரை வழியனுப்பும்போது சேரமான் பெருமாணுயனர் ஏழடி நடந்துசென்று வழியனுப்பியதாகப் பரஞ்சோதியார் திருவிளையாடலில் கூறியிருப்பதும் இங்கே கருதத்தக்கது.

2. புறப்பொருள் வெண்பாமாலை 16; 207.

களிப்பிக்கும் பாணன்''[1] என்பதற்கு விளக்க
வுரை எழுதுமிடத்து நச்சினார்க்கினியர், 'யாம
ழப் பண்ணினால் களிப்பிக்குமென்றது, இல்ல
றம் நிகழ்த்துவதற்குரியனவற்றைப் பாடிக்
காட்டி யாம் வருந்தாதபடி பண்ணுது,
பரத்தையரிடத்தே ஒழுகுதற்கு வேண்டுவன
வற்றைப் பாடிக்காட்டிக் களிப்பிப்பவன்
என்றவாறு' என்று உரை எழுதியிருக்கின்றார்.

தலைவன்பால் தலைவிக்குள்ள ஊடலைத்
தீர்த்தற்பொருட்டுப் பாணன் தலைவியினிடம்
தூதுசெல்லுதலும், தலைவனைப் பிரிந்து தலைவி
துன்பமிகுதியால் வருந்துவதைத் தலைவனுக்குக்
கூற அவன் பால் தூதுசெல்வதும் பாணனுக்
குத் தொழிலாகும். தலைவனின் பிரிவாற்றா
மையால் தலைவி படும் வருத்தத்தைக் கண்டு
இவன் வருந்துவதுமுண்டு.

தலைவனுக்குத் தூதாகவந்த பாணனைத்
தலைவி தோழி முதலியவர்கள் இழித்துக் கூறு
வார்கள். அகப்பொருளில் 'பாணனொடு வெகு
ளல்' என்ற துறை தலைவி பாணனை வெகுண்டு
கூறுவதை உணர்த்துகின்றது. இத்துறை
கலம்பகங்களில் 'பாண்' என்ற உறுப்பாகக்
கூறப்பட்டிருக்கிறது.

1. கலித்தொகை 72

## 9. பாணரும் புறப்பொருட் பகுதியும்

புறப் பகுதியிலும் பாணரைப் பற்றிய செய்திகள் உண்டு. அவை வருமாறு: கூத்தர், பாணர், பொருநர்,விறலியர் இந்நால்வரும் ஆற்றுப் படுத்தற்குரியவர்கள். இவர்கள் பெயரால் அமைந்த ஆற்றுப் படைகள் தொகைநூல்களிலும் பிற்காலத்துக் கலம்பகம் முதலிய நூல்களிலும் தனிச்செய்யுட்களாக அமைந்துள்ளன.

போர்க்களத்தின் செல்வமிகுதியை யாழ்ப் பாணர் கூறுவதுண்டு. இது களவழி வாழ்த்து[1] எனப்படும். வெட்சி வீரர் தாம் பகைவரிடமிருந்து கவர்ந்துவந்த பசுக்கூட்டங்களைப் பாணருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். களிறெறிந்து மறங்காட்டிச் செங்களத்தே இறந்து பட்ட வீரர்களுக்குப் பாணர்கள் நெருப்பை மூட்டி இறந்தவர்களின் ஆற்றல் தோன்றச் சாப்பண்ணை (விளரியை)ப் பாடுவதுமுண்டு. இதற்குரிய துறை பாண்பாட்டு [2] எனப்படும். இறந்துபட்ட வீரனது நடு கல்லைப் பாணர் தொழுவதும்[3] உண்டென்று தெரிகிறது. பாணர் அரசர்க்கு விடியற்காலையில் துயிலெடை பாடல் வழக்கமாக இருந்தது.[4]

---

1. புறப்பொருள் வெண்பாமாலை, 207.
2. ஷை 137.
3. ஷை 252.
4. மதுரைக் காஞ்சி, 223 - 4.

## 10. இறுவாய்

சங்கநூல்களிலே பாணர்களின் செய்திகள் பலவிடங்களில் காணப்படுகின்றனவேனும் இக்காலத்தில் தமிழ்நாட்டில் பாணர் என்ற வகுப்பார் இலராயினர். இவர்களால் பெரிதும் போற்றிவரப்பட்ட தனித்தமிழ் யாழ்க்கலையும் ஒழிந்தது. பிற்காலத்தில் பாணர்கள் என்னவாயினர் என்பது தெளிவாகத் தெரியவில்லை. பௌத்தரும் சமணரும் தென்னாட்டிற்கு வந்த பின்னர் பாணர்கள் மெல்ல மெல்ல அழிந்திருக்கவேண்டுமென்று ஊகிக்கலாம். துறவறத்தையே சிறந்த அறமாக வற்புறுத்துகின்ற பௌத்த சமணர்கள் இசைப்பாட்டுக்களும் அவற்றிற்குரிய கருவிகளும் சிற்றின்பத்தையெழுப்பத்தக்கவை என்றெண்ணிப் பாணரது தொழிலை ஓங்கவிடாமலும், ஆதரியாமலும் அடக்கிவந்த காரணத்தினால் பாணர்கள் தம் தொழில்களை விட்டொழித்து வயிறு வளர்ப்பதன் பொருட்டுப் பிறதொழில்களை மேற்கொண்டிருக்கலாம்.

"இசைப்பாட்டு, காமத்தை விளைவிக்கும்", "இசையுங் கூத்தும் காமத்துக்கு உத்

1. சீவக சிந்தாமணி 28; பாகவதம் 10. 12: 6

நீபனம்"[1], "இசையுங்கூத்தும் கேழ்த்தெழுந்து ஈன்றகாமம் "[2], "இசை நாடகங் காமத்தை விளைத்தலின்"[3] முதலிய தொடர்களை நோக்குகையில் இடைக்காலத்தவர்கள் இசையினிடத்தும் நாடகத்தினிடத்தும் கொண்டிருந்த வெறுப்பு இத்தகையதென்பது புலனாகின்றது.

சங்க காலத்திற்குப்பின் சில விடங்களிற்றான் பாணர்கள் பிரசித்தர்களாக இருந்தார்கள். திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் காலத்தில் கி. பி. 500க்கும் 600க்கும் இடையில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிரபலராக இருந்தார். அவர் காலத்துக்கு இரண்டொரு நூற்றாண்டுகளுக்குப் பின் திருப்பாணாழ்வார் வாழ்ந்து வந்தார். திருமுறை வகுத்த முதல் இராஜராஜ சோழன் காலத்திலே (கி. பி. 985 - 1012) திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரின் சந்ததியில் வந்த ஓர் நங்கையார் பண்ணமைப்பில் வல்லுநராக இருந்தாரென்றும் அவரைக்கொண்டு தான் தேவாரத் திருமுறைகளுக்குப் பண்ணடைவு செய்யப்பட்டதென்றும் கேள்விப்

1. சீவக சிந்தாமணி, 2597 உரை; உத்தீபனம்- பிரகாசிக்கச் செய்யுங் கருவி.
2. ௸ 2598.
3. ௸ 411.

படுகிறோம். 11-ஆம் நூற்றாண்டிலிருந்து பாணர்களுடைய பிரஸ்தாபம் கேட்கப் படவில்லை.

ஒரே வகுப்பாரில் பெண்பாலார் ஆடலை மேற்கொண்டு அபிநயக்கலையை வளர்த்துவந்தமையும், ஆண்பாலார் இசையை வளர்த்து வந்தமையும் பற்றித் தமிழ்நாட்டிலன்றி வேறு நாடுகளில் எக்காலத்தும் நாம் கேள்வியுற்றதில்லை. இக்காலத்தே நம் நாட்டிலுள்ள தேவதாசிகளையும் அக்குலத்து ஆண்பாலாரையும் நோக்கும்போது இசையும் கூத்தும் ஓரினத்தவரால் போற்றப்பட்டுவரும் வழக்கம் புலனாகின்றது.

# "நான் கண்ட நல்லிடங்கள்"

[ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் இலக்கியச் சுவையுள்ள கடிதங்கள் இருப்பதுபோல் தமிழ் மொழியில் இல்லை என்றே கூறவேண்டும். இதற்குக் காரணம் பொதுவாகத் தமிழர்கள் தமக்குள் இலக்கியச் சுவைபட நீண்ட கடிதங்கள் எழுதும்பயிற்சியை மேற்கொள்ளாமையே யாகும். சிலர் அத்துறையில் ஈடுபட்டிருப்பினும், அன்னார் எழுதிய கடிதங்கள் வெளிவந்து உலவவில்லை. எனக்கு ஒரு நண்பர் பல விரிவான கடிதங்களை எழுதியுள்ளார். அவற்றுள் கீழ்வருங் கடிதம் ஒன்று. இதனை எழுதியவர் இக்கடிதப் பகுதி வெளிப்படுத்தப்படும் என்பதை அக்காலத்து அறியார். தமிழ்நாட்டிலுள்ள சில தலங்களின் செய்திகளை இக்கடிதம் அழகாக வெளியிடுகின்றது. தலங்களைப் பற்றிய வரலாறும் சரித்திரச் செய்திகளும் இதனுள் போதிய அளவு விரிவாகக் காணப்படவில்லையென்ற கருத்து அன்பர்களுக்கு எழுமேல், இது கட்டுரையன்று, கடிதம், என்பதை மட்டும் நினைவு கூர வேண்டுகின்றேன். யாவருக்கும் இன்பத்தை உண்டாக்கும் என்னும் நோக்கத்துடன் இதனை வெளியிடத் துணிந்தேன்.]

பேரன்புடையீர்! வணக்கம் பல.

நல்லேன்; நலனிலை தெரிவிக்க வேண்டுவல்.

முன்னர் எளியேன் அறிவித்தவாறே இடைமருதில்[1] முதலிய பல்லூர்கட்கேகி 21,4-'29 காலை மீண்டோம். திருவிடை மருதூரில் அம்பிகை கோயிற் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இடைமருதில் சிறந்த தலமென்பதை நீங்கள் அறிவீர்களன்றோ? இது சோழர்கள் காலத்திற் செப்பனிடப்பட்ட கோயிலையுடையது. இத்தலத்தில் அம்பிகை வலப்பக்கத்திற் கோயில்கொண்டிருக்கிறாள். இங்ஙனம் இருக்கும் தலங்கள் சக்திப்ராதான்யமானவை என்ப. மிகப் பெரிய கோயில். ஈசுவரன் கோயிலைச் சுற்றியுள்ள மதிலிற் சாந்தப்படிவங்கள் (சுண்ணவுரு) மிக அழகாக அமைக்கப்பட்டுள்ளன. ஈசுவரனுடைய மூர்த்திபேதங்கள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. இத்தலத்தில் முருகனுடைய திருவுருவம் எங்கும் அமையா நலனொடு திகழ்கின்றது. மயில்மீதேறிய கோலம்; மயிலின் இருபுறமும் தொங்கவிடப்பட்ட திருத்தாள்கள்; ஆறுமுகங்கள்; யாவும் உள்ளின் உள்ளம் கொள்ளை கொள்ளும். இங்கு மூகாம்பிகை என்னும் பெயரோடு தவஞ்செய்யும் கோலத்தில் அம்பிகை எழுந்தருளியிருக்கும் ஆலயமொன்றுண்டு.

---

1. திருவிடை மருதூரென்னும் தலம்.

இடைமருதிலினின்றும் நீங்கிக் **கோட்டையூர்** என்ற பாடல் பெற்ற தலத்திற்குச் சென்றோம். அது **கோடீச்சுரம்** என்று வழங்கப் பெறும். காவிரிக்கரையில் உள்ளது. அத்தலத்திற்கு ஓரழகிய கோவை உண்டு.

பின்பு **தாராசுரம்** என்ற தலத்திற்குச் சென்றோம். இரண்டாவது இராஜராஜன் மகன் மூன்றாம் குலோத்துங்கன் என்ற சோழன் இக் கோயில் திருப்பணி செய்தான். இங்குப் பல வீதிகளும் பல கோபுரங்களும் இருந்தன. இதனை யுள்ளிட்ட பல ஊர்கள் சேர்ந்து சோழர்களுடைய ஒரே இராஜதானி நகரமாயிருந்தது. சிற்பம் இக்கோயிலில் தாண்டவமாடுகின்றது. ஓர் அங்குல இடத்தில் ஒரு புராணகதை சிற்பத்துள் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது பல கோபுரங்கள் இடிந்திருக்கின்றன; சில இடிந்து கொண்டும் வருகின்றன. அரும்பெரும் சிற்பக் கருவூலங்கள் மண்ணோடு புதைந்தன; புதைகின்றன; புதைந்தேவிடும். இனிமேல் அவைகளுக்கு மீட்சியில்லை. அவைகளைப் பார்க்கையில் எங்களுக்குத் தாங்கொணுத் துயரம் தலைக் கொண்டது. என் செய்வது !

நாடக நூல்களின் இலக்கியமாக அளவற்ற ஓவியங்கள் காணப்படுகின்றன. பலவித

மான கூத்துக்கள், மூர்த்தி பேதங்கள் இவைகளை அளவிட முடியா. ஓர் இடத்தில் தட்டினால் ஏழு சுவரங்களையும் ஒரு கல் காட்டுவதை எங்கேயாவது கேட்டிருக்கிறீர்களா? இந்தக் காலத்தில் மினுக்கப்பட்ட (Polished) சிலைகளெல்லாம் கண்டு வியந்திருந்த நான் இக்கோயிலிலுள்ள நுண்ணிய சிற்பத்திறனமைந்த உருவங்களைக் கண்டு விம்முற்றேன். திரிபுர தகனம், இராவணன் கைலையெடுத்தல், முதலிய அழகிய உருவங்கள் கண்டு களிப்பனவே யன்றிக் கூறித் தெளியவரியன.

நாயன்மார்களுடைய சரிதங்களும் ஓவியங்களாற் சமைக்கப்பட்டுள்ளன.

இங்குள்ள இராஜகம்பீரன் திருமண்டபம் என்று பெயர் பொறிக்கப்பட்ட மண்டபமொன்று தேர்வடிவினதாகக் குதிரை, வண்டியின் ஆழிகள், இவைகளோடும் சமைக்கப்பட்டிருக்கிறது. இம்மண்டபத்திலுள்ள ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு புராண கதை—எல்லாம் அப்படியே ஓவியத்தால் அமைந்தவை—கண் களிக்கும் செய்தி. சொல்லும் பொருளும் சமைந்த கவிப்புராணத்திலும் கல்லும் உளியும் சமைத்த சவிப்புராணமாம் [1] இதனை யாத்தல்

1. சவிப்புராணம் ஒளி நிறைந்த பழமை.

அருமையினும் அரிய செயலன்றோ! அள விறந்த சிற்பக் காட்சிகள் திகழும் இக்கோயிலை ஒரு சிற்ப உலகம் (Paradise of Architecture) என்றே சொல்லிவிடலாம்.

கடும்பகலில் கதிரவன் வெம்மையும் கோயி லின் நிலை குறித்து நெஞ்சிற் கொப்புளிக்கும் வெம்மையும் ஒருங்கே துரப்ப அங்கிருந்து **பட் டீசுரம்** போய்ச் சேர்ந்தோம். இதுவும் பழைய பாடல் பெற்ற தலமே. தாராசுரம், பட்டீசுரம், பழையாறை முதலிய பலவுமே முற்கூறப்பட்ட சோழர் தலைநகரின் பகுதிகளாம்.

இத்தலத்தில் **ஞானசம்பந்தர்** முத்துப்பல்லக் கிலிருந்து தரிசனம் செய்யுமாறு நந்தி விலகி யிருக்கிறார். சிற்ப நயங்களும் உள.

இவ்வூரைச் சேர்ந்ததே **சத்திமுற்றம்** என்ப தும். பட்டீசுரம் கோயிலுக்கும் சத்திமுற்றம் கோயிலுக்கும் இடையே இரண்டே தெருக்கள். நாரைவிடு தூது பாடிய **சத்திமுற்றப் புலவர்** சந்தி யார்கள் இப்பொழுதும் இங்கு இருக்கிறார்கள்.

பின்னர், **திருவலஞ்சுழி** என்ற தலத்திற்குச் சென்று ஓரிராத் தங்கினோம். இதுவும் பாடல் பெற்ற தலம். இங்கு விநாயகர் மிகப் பிரத்தி யட்சம். விநாயகருடைய கோயில் சிற்பக் கைத்

திறன் செறிந்தது. சுவர்கள் பலகணிபோன்று குடையப்பட்டுள்ளன. தூரத்திலிருந்து பார்ப் போர் கதவென மயங்குவர்.

இத்தலத்தில் அம்பிகை வலப்பக்கம் கோயில் கொண்டிருக்கிருள். அம்பிகை கோயிலின் வாயிலில் ஒரு பெரிய புத்த விக்கிரகம் நிற்கிறது. இத்தலத்திற்கு அக்கரை யிற்ருன் **சுவாமிமலே** இருக்கிறது. பொழுது **போயின**மையின் அங்கே செல்லவில்லே.

மறுநாள் தஞ்சை வந்து சேர்ந்தோம். தஞ் சாவூர்க் கோவிலேப் பற்றி நீங்கள் கேள்வியுற் றிருக்கலாம். சோழப் பெருங்குலத்தின் பிற் காலப் பரம்பரையில் ஒரு சிங்கவேருக விளங் கிய **முதல் இராசராச சோழன்** ஆக்கிவைத்த அக் கோயில், அவனுடைய பெருமையை உலகிற்குக் காட்டிக்கொண்டு நிற்கிறது. **'இராசராசேச்வரம்'** என்பது அக்கோயிலின் பெயர். தமிழ்நாட்டுச் சிற்பத்திறனுக்கும் சோழவரசர்களுடைய பக் திக்கும் ஒரு சிறந்த அடையாளமாக நிலவும் அக்கோயிலேக் காணும் அவா நீண்டநாளாக என் நெஞ்சில் இருந்தது.

அன்று வானம் மந்தாரமிட்டிருந்தது. மாலே மூன்றுமணிநேரம்..........அவர்களுடன்

தஞ்சைப் பெரிய கோயிலுக்குச் சென்றேன். புறத்திலே இருந்த அகழியும் மதிலும் காவியங்களில் இராசதானி நகரங்களை வருணித்திருக்கும் வருணனைகளை நினைவூட்டின. இப்பொழுது அகழி தூர்ந்து வருகின்றது. உள்ளே புகுந்து சென்றேன். குன்றுபோலுயர்ந்த நந்தி முன்பு இருந்தது. அஃது ஒரே கல்லாற் சமைந்தது. மலைபோலுயர்ந்த கோபுரத்தைக் கொண்ட விமானத்தைச் சுற்றிப் பரந்த இடம் இருக்கிறது.

அந்த விமானத்தை அணுகிப் பார்த்துக்கொண்டே சுற்றி வந்தோம். சுவர்களில் இருந்த சிற்பங்களையும் கவனித்தோம். மனிதர்களிற் பலர் தம்முடைய உள்ளக் கிடக்கையை நன்கு அமைத்துப் பாவம் புலப்படச் சொல்லிற் காட்ட முடியாமல் தவிப்பதைப் பார்த்திருக்கிறோம். என்ன ஆச்சரியம்! அந்தத் திருக்கோயிற் சுவர்களில் பாவங்களைக் கல்லிற் காட்டி அமைத்த சிற்பங்களைக் கண்டோம். நாயன்மார்களுடையஉருவங்களைப் பார்த்தோம். நடன வகைகளை நோக்கினோம். சிவபிரானுடைய பல மூர்த்தங்களைத் தரிசித்தோம். சிற்ப எழிலின் முழுத் திறனும் அங்கே கொலுவீற்றிருப்பதாகவே நாங்கள் எண்ணினோம். அந்த எண்ணம் பிழையென்பதைச் சுப்பிரமணியர் ஆலயம்

காட்டி விட்டது. ஏன், தெரியுமா? அவ்வாலயம் முன்பு பார்த்தவிடத்தைவிட அத்துணை அழகு வாய்ந்தது. கல்லில் இழைப்பு வேலை செய்த அந்தச் சிறிய ஆலயத்தைக் கண்டவுடன் என்னை அறியாமலே அழுகை வந்துவிட்டது. இத்தகைய உயர்நிலையில் இருந்த தமிழ்நாட்டுச் சிற்பமும், அவற்றிற்கு நிலைக்களனாக இருந்த கோயில்களும் இப்பொழுது ஆதரிப்பாரற்று அழிந்து வருகின்றனவே என்ற எண்ணம் என் கண்களிலிருந்து நீர்த்துளிகளாக வெளிப்பட்டன.

சிலாசாஸனங்கள்! தஞ்சைக் கோயிற் சிலாசாஸனங்களை உலகமே புகழ்வதை நாங்கள் நன்கு அறிந்திருந்தோம். இராசராசனும் அவனுடைய குலத்தினரும் செய்த தர்மங்களைப் பதிவு செய்திருக்கும் 'சப்ரிஜிஸ்த்ரார் ஆபீஸாக' அக்கோயில் விளங்குகிறது. 'கன்மேலெழுத்துக்கு நேர்' என்று சொல்வார்கள். இங்கே அப்பெருவள்ளல்கள் செய்த நலன்கள் கல்மேலெழுத்தாகவே இருக்கின்றன. கோயிலை நிருவகிக்கும் முறைகளும், கோயிற் பணிபுரிவாருடைய ஒழுங்கும், அவர்கள் செய்யவேண்டிய பணிவிடைகளும், கோயிலுக்குரிய பலவகைச் சொத்துக்களும், விழாக்களின் நிகழ்ச்சி முறையும், பிறவும், அந்தச் சாஸனங்களில் உள்ளன.

அவற்றை யெல்லாம் கல்லில் எழுதியிருக்கும் அந்த மன்னர்களுடைய புகழ் இன்றளவும் நிலைத்திருக்க, அவர்கள் அமைத்த அமைப்புக்கள்மட்டும் மாறிப்போயின!

கோயிலுக்குள் நுழைந்து அங்கே உள்ள இருளைப்பார்த்த பொழுது, கல்லிலெழுதிய சாஸனங்கள் வெளிநாடுகளிலும் பெருமையுற்றிருக்க, பிரமன் தமிழர் தலையிலெழுதிய சாஸனம் உள்ளே இருளைப் புகவிட்டு அவற்றை நாம் புறக்கணிக்கச் செய்தது. எவ்வளவோ சிறப்பாகச் சுடர்விட்டிலங்கிய அத்திருக்கோயிலின் உள்ளே இப்பொழுது ஒருவன் செல்லுகையில் ஒரு மலைக்குகையில் செல்லுவதையொத்த உணர்ச்சியையே அடைகிறான். உள்ளே கோயில்கொண் டெழுந்தருளியுள்ள **பெருவுடையார்** அன்றுபோலவே இன்றும் இருக்கிறார். ஒளி சூழ்ந்து விளங்கிய காலம் போய் இருள் சூழ்ந்து அழுங்கும் காலத்தில் அவருடைய பெரிய திருமேனி அன்று கண்ட திருக்கோலத்தோடே விளங்குகின்றது.

மாலைக்காலம் நெருங்கிவிட்டதனால் மேலும் பலவற்றையும் பார்க்க இயலவில்லை; எனினும் பார்த்தவளவில் ஒருவகைத் திருப்தியும், பெருமையும், இரக்கமும் எங்கள் மனத்திற் குடிகொண்டன.

மறுநாள் நாங்கள் பார்க்கவேண்டிய இடம் **விக்ரமசிங்கபுரம்.** ........................................ ஆகவே அன்றிரவே நாங்கள் சோழநாட்டினின்று நீங்கிப் பாண்டியநாட்டிலுள்ள விக்ரமசிங்கபுரத்திற்குப் பிரயாணமானோம்.

**விக்கிரமசிங்கபுரம்** பொதியில் மலையடியிலிருந்து ஒருமைல் தூரத்திலிருக்கிறது. இங்குத்தான் **சிவஞானசுவாமிகள்** திருவவதாரம் செய்தார்கள். அவர்களுடைய அவதாரஸ்தலத்தைத் **திருவாவடுதுறை மடத்தார்** வாங்கி அங்கே சுவாமிகளின் கோயிலொன்று கட்டியிருக்கிறார்கள்.

பொதியின் மலை அடிவாரத்தில் **பாபநாசம்** என்ற தலம் இருக்கின்றது. ........நாங்கள் பாபநாசம் சென்றோம். அங்கே கண்ட காட்சியை என்னவென்று சொல்லுவேன்! இயற்கையழகியின் திரு உருவம் முழுமையும் இலங்க ஐம்புல இன்பமும் அருள்வது அவ்விடம். தாமிரபர்ணி பொதியினின்றும் இழிந்து பாறைகளில் தவழ்ந்து ஓடும் அழகும், பிறரால் எவ்வித இடையூறுமின்றிக் குழந்தைகள் போல, நீராடுங்கால், நம்மை வந்து மொய்த்துத் தவழும் பெரிய மீனினங்களின் பிறழ்ச்சியும், தூய நீரின் ஒலியும், கரைகளிற் குரங்கினங்கள் ஏமாந்தவர் பொருள்களை வவ்வி மரங்களிற் பாயும் காட்சி

யும், அழகிய கோயிலும் ஒருங்கே அமைந்த அந்த இயற்கைத் தேவியின் தலைமை இருக்கையை நீங்கள் ஒருமுறை கண்டு அநுபவிப்பதானால்—வாழ்வு முழுவதும் வெறும் பரதேசியாக அங்கேயே இருந்து விடலாமே என்ற எண்ணம் உங்களுக்கு உண்டாகாமலிராது.

உடலும் உள்ளமும் குளிர நீராடினோம். தென்றலுக்குப் பிறப்பிட மன்றோ பொதியில்! மன்றலுறும் தென்றலிலே, வண்ணமுறும் [1]தண்ணறலில், எண்ணமெலாமின்பூறி, இசைந்திருந்தே மாயினோம். பின்பு திருக்கோயிலில் வந்து தரிசனம் செய்தோம். சுவாமி பெயர் **முக்களா லிங்கர்**. அம்மை—**உலகம்மை**. களாமரம் கோயிலின் பின்புறத்து ஒரு கொடிவீடுபோற் பரந்திருக்கிறது. அதனருகே[2] 'வேரு முதலுங் கோடு மொராங்குத் தொடுத்த போலத் தூங்குபு தொடரிக் கீழ்தாழ் வன்ன வீழ்கோட்' பலா மரங்கள் நின்றன. களாவும் பலாவும் ஒருங்கே கண்டோம்.

இக்கோயிலில் சுவாமியின் கருப்பக்கிருகத்தைச் சுற்றி மிகக்குறுகிய இடத்தில் கைவல்

1. தண் அறல் - குளிர்ந்த நீர்
2. குறுந்தொகை

வினைஞர் சிறந்த சிற்ப உருக்களைச் சமைத்துள்ளார்கள்.

தரிசனத்தின் பின்னர்க் கோயிற் பிரசாதத்தை (எண்ணெய்ச்சாதம்; மிகமிகச் சுவையுடையது) அருவியில் நின்று கொண்டு மீனினமாம் விருந்தினர்களோடு உண்டுவந்தோம். தொகுத்துக் கூறின், "கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்" அங்கு எங்கும் நுகர்ந்தறியா இன்பம் நுகர்ந்தன.

நான்கண்ட இன்பம் நண்புடையார்க்கும் ஆகவென்னும் உள்ளக் கிடக்கையேதுவாதலின் இவ்வெற்றுரைப் புட்டிலை யெழுதினேன்.

---

# தமிழ் வைத்தியம்

பலவிதப் பிறவிகளிலும் மனிதப்பிறவியே மேலானது. புண்ணிய பாவங்களையும், இன்ப துன்பங்களின் வழிகளையும் அறிந்து கொள்ளும் பகுத்தறிவு மனிதனுக்கே வாய்த்திருக்கின்றது. மானிடப் பிறவியின் பயன் முத்தி அடைவதேயாம். முத்தி அடைவதற்குச் சில சாதனங்களை நாம் கைக்கொள்ள வேண்டும். தேக திடமும், ஆரோக்கியமும், நீண்ட ஆயுளுமிருந்தாலொழிய அச்சாதனங்களைப் பெறுவது அருமையாகும்.

உணவும் செயல்களும் ஒவ்வாமையினால் மனிதன் நோய்வாய்ப்பட்டு வாழ்நாளின் இடையில் உடல் மெலிவை அடைகிறான்; அல்லது அகால மரணத்துக்கு ஆளாகின்றான். வீடு பேற்றையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்ட மனிதர் நெடுங்காலம் திடமுள்ளவர்களாக வாழ்ந்திருத்தற் பொருட்டே வைத்திய முறை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

ஒரு நாட்டு மக்களின் உடற்கூறு அந் நாட்டு மண்ணோடு தொடர்புடையதென்று

3422

பெரியோர்கள் கூறுவார்கள். ஒருவருக்கு நோயுண்டானால் அந்நோயைப் போக்க, அவர் வாழும் நிலத்தில் விளைந்த பொருள்களைக் கொண்டு செய்யப்பட்ட மருந்தே சிறந்ததாகும். நோய் உள்ள இடத்திலேயே அதற்கு முறிவான மருந்தும் கடவுளால் அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும் நோயாளி வாழும் தேசத்தின் கால இயல்புக்கு ஏற்றவாறும், அவன் பழக்க வழக்கங்கள், மதம், முதலியவற்றிற்குத் தக்கவாறும், அவன் உண்ணும் மருந்தும் பத்தியவகைகளும் அமையவேண்டும். இந்த விதிகளை ஒட்டியே ஒவ்வொரு நாட்டிற்கும் தனித் தனியே வைத்திய சாத்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்விஷயத்தை நோக்கும்போது அந்த அந்த நாட்டு மக்களுக்கு அவ்வந் நாட்டு அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வைத்திய முறைகளே சிறந்தனவாகுமென்பது புலனாகின்றது. தமிழ் நாட்டில் தோன்றித் தமிழ் நாட்டிலேயே பரம்பரையாக வாழ்ந்து வருகின்றவர்களுக்குப் பண்டைத் தமிழ் வைத்தியர்கள் கூறும் மருத்துவ முறைகளே சிறந்தவையாம்.

தமிழ் வைத்திய முறை **சித்தவைத்தியம்** எனப்படும். போகர், கொங்கணர், தேரையர், கோரக்கர் முதலிய தமிழ் நாட்டுச் சித்தர்கள்

கண்டறிந்த முறை யாதல் பற்றி இஃது இப் பெயர் பெற்றது.

நோய்களைத் தீர்ப்பதன் பொருட்டு, மருந்து செய்தல், உதிரங் களைதல், அறுத்தல், சுடுதல், ஆகிய நான்கு முறைகளையும் அக் காலத்திலேயே நம் முன்னோர்கள் நன்கறிந் திருந்தார்கள். அவர்தம் மருந்துகள் பெரும் பாலும் பொன் முதலிய உலோகங்களிலிருந் தும் தாவர வர்க்கத்திலிருந்தும் செய்யத் தக் கவை. பிராணிகளைக் கொன்று அவற்றின் உதிரம் முதலியவற்றைக் கூட்டிச் செய்யப் படும் மருத்துவ முறையை அவர்கள் பெரும் பாலும் அறியார்கள். அவர்கள் ஜீவகாருண் யம் மிகுந்தவர்களாதலால், ஓரறிவுடைய செடி கொடிகளைக் கூட மருந்துக்காகப் பிடுங்கும் போது சில மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு அவற்றைப் பறிக்கவேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார்கள்.

தாவர வர்க்கத்தை மனிதர் உடல் நலங் குறித்துச் சிதைத்தலும் இழுக்குடையதே என் னும் கருத்து, பின்வரும் **பெருங்கதை** யடிகளிற் குறிப்பிக்கப்படுகின்றது.

"மரமுதல் சாய மருந்துகொண் டாஅங்கு
நங்குடி வலித்தல் வேண்டி நம்பி
தன்குடி கெடுத்த தகவி லாளனேன்"

(விழாக்கோண்டது)

இது பிரச்சோதனனென்னும் அரசன் உதயணனை நோக்கிக் கூறியது. உதயணனைச் சிறைப்படுத்தித் தன் குமாரர்களுக்குப் படைக் கலப் பயிற்சி செய்விக்கும்படி செய்த தன் வன்கண்மைக்கு, மரத்தின் வேர் சாயும்படி மருந்துகொள்ளும் வன்கண்மையை உவமை கூறுகின்றான்.

முற்காலத்தில் தமிழ் வைத்திய நூல்கள் பல இருந்தன. அவை யாவும் செய்யுள் வடிவி லுள்ளவை. அவற்றுள் பெரும்பாலன அழிந்து போயின. அங்ஙனம் அழிந்தும் இக்காலத்தில் தமிழ் நாட்டில் எங்கும் மிகுதியாகக் காணப் படும் சுவடிகள் வைத்தியச் சுவடிகளே. அவை இக்காலத்தில் தமிழ்ப்புலமை வாய்ந்தோரால் புறக்கணிக்கப்பட்டுள்ளன. முற்காலத்திலே அறிஞர்கள் வைத்தியசாத்திரக் கல்வியைத் தமிழோடு தொடர்புபடுத்தி ஓதி வந்தார்க ளென்று பலகாரணங்களைக்கொண்டு கூறலாம். மருத்துவர்களிற் பலர் தமிழ் வித்துவான்களாக இருந்துவந்தனர். **மருத்துவன் தாமோதரனர்** என்பவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர் திருக்குறளின் பெருமையைக் கூறவந்த விடத்து, "சீந்திநீர்ச் சருக்கரையையும் சிதைக் கப்பட்ட சுக்கையும் தேனோடு கலந்து மோந்த

பின் தலைக் குத்துத்தீரும்"[1] என்று கூறியுள்ளார். பெரும்பாலும் ஆரோக்ய விதிகளைத் தொகுத்துக்கூறும் **ஆசாரக்கோவை** என்ற நூலை ஒரு புலவர் இயற்றியுள்ளார். இது **பதினெண் கீழ்க்கணக்கு** நூல்களுள்ஒன்றாகத் திகழ்கின்றது. சில புலவர்கள் தாம் எழுதிய நீதி நூல்களுக்கு அக்காலத்தில் சர்வ சாதாரணமாக வழங்கி வந்த சிறந்த மருந்துகளின் பெயர்களை அமைத்துள்ளார்கள். அவற்றுள் சில [2]**திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம்** என்பன. திருவள்ளுவர் தாம் எழுதிய **திருக்குறளில்** 'மருந்து' என்று ஓர் அதிகாரத்தை அமைத்திருக்கிறார். **பதார்த்தகுண சிந்தாமணி** என்று தமிழில் ஒரு நூல் இருக்கிறது. இது மருந்துக்குப் பயன்படும் வேர், இலை, கிழங்கு முதலிய பொருள்களின் குறை குணங்களை எடுத்துக் கூறுகின்றது. இவற்றைத் தவிர வாகட விஷயங்களிற் பல, உவமைகளாக இலக்கியங்களிற் காணப்படுகின்றன.

---

1. "சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்"

—திருவள்ளுவமாலை.

2. திரிகடுகம் - சுக்கு, திப்பிலி, மிளகு. ஏலாதி-ஏலம் முதலியவற்றாற் செய்யப்படும் ஒரு சூர்ணம். சிறுபஞ்சமூலம் - கண்டங்கத்திரி வேர், சிறு மல்லி வேர், சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர் என்பன.

ஒருகாலத்தில் தமிழறிஞர்களால் பெரிதும் போற்றிவரப்பட்ட சித்த வைத்தியம், இன்று மெலிவுற்றிருக்கும் காரணம் என்னவென்ற வினு எழுகின்றது.

தமிழ் வைத்தியம் இந்நாட்டில் பரவி யிருந்த காலத்தில் வடநாட்டார் தங்கள் வைத் திய முறையை இங்கே கொண்டுவந்தனர். அஃது **ஆயுர்வேதம்** எனப்படும்.

ஆயுர்வேதமும் இந்தியாவில் தோன்றி யதே. ஆயுர்வேதமும் சித்தவைத்தியமும் ஒன் றைப் பார்த்து மற்ருென்று திருத்தப்பாடுகளை அமைத்துக் கொண்டன. ஒன்றில் புலமை வாய்ந்தவர் மற்ருெரு வைத்திய முறையையும் கற்கலானுர். இதன் பயனுக நாளடைவில் இரு முறைகளும் தம்முள் பெரும்பாலும் ஒன்று படலாயின. மிகப் பழையகால முதற்கொண் டே இந்த ஒற்றுமை இருந்துவருகிறது. இக் காலத்தில் வைத்தியத்தில், வடநாட்டு முறைக் கும் தமிழ்முறைக்கும் அதிக வேற்றுமை காண் பது அரிது. தமிழில் வழங்கி வந்த சில மருந்துக ளின் பெயர்களும் நோய்களின் பெயர்களும் இன்று வடமொழிப் பெயர்களால் வழங்கப் படு கின்றன. பெயர்கள் வடமொழியாயிருத்தலைக் கொண்டு அப்பெயர்கள் குறிக்கும் பொருள்

கள் பழந்தமிழர்களால் கண்டறியப் படாதவை என்று நாம் தீர்மானித்து விடலாகாது. **தாமிர பர்ணி** யாற்றுக்குத் தனித் தமிழில் **'பொருநை'** என்று ஒரு பெயருண்டு. இக்காலத்தில் அச் சொல் உலகவழக்கத்தில் வழங்குவதில்லை. தாமி ரபர்ணி என்ற வடமொழிப் பெயரைக்கொண்டு ஆரியர்கள் தமிழ்நாட்டிற்கு வாராததன் முன் இந்த நதி தமிழ்நாட்டில் இல்லை என்று 'பொ ருநை' என்ற சொல்லைக் கேள்வியுற்றிராத ஒரு வன் தீர்மானித்து விடுவானுனால், அவனைக் குறித்து நாம் என்ன சொல்வது! ஆரியச் சிதை வாகிய பிராகிருதமொழி ஒருகாலத்தில் இந்தி யாவின் பொது மொழியாக இருந்தது. அக்கா லத்தில் பல தமிழ்ப் பெயர்கள் பிராகிருத பாஷையில் பெயர்க்கப்பட் டிருக்கவேண்டும். அவ்விதம் மொழிபெயர்க்கப்பட்ட சொற்களே மிகுதியாகப் பயின்றுவந்த காரணத்தினால் அவற்றிற்குரிய தனித்தமிழ்ச் சொற்கள் வழக்காறற்று ஒழிந்தன.

ஆயுர்வேத முறையும் சித்தவைத்திய முறை யும் ஒன்றோடொன்று கலந்து, சகோதர முறையில் நாட்டில் செல்வாக்குற்றிருந்த காலத் தில்தான் தமிழிலே பல பல வைத்திய நூல்கள் தோன்றின. இவற்றை எழுதியவர்களில் பெரும்பாலோர் ஆரியம் தமிழாகிய இருமொழி

யிலும் வல்லவர்கள். அவர்கள் தம்மாலெழுதப் படும் நூல்கள் தம்பெயராலேயே நிலவவேண்டு மென்ற விருப்பங்கொண்டவர்கள் அல்லர். அவர்கள் எழுதிய நூல்கள் அகத்தியர், திருவள் ளுவர் முதலிய பெரியோர்களின் பெயர்களால் இன்று விளங்குகின்றன. இவர்களின் மாணவ பரம்பரையினரில் சிலர் தாம் பாடங் கேட்ட வற்றைத் தொகுத்து வெளியிட்டிருக்கலாம். இறையனர் களவியலுரையை, நக்கீரரிடமிருந்து சிஷ்ய பரம்பரையாகப் பாடங்கேட்டுவந்தவ ரில் ஒருவர் எழுதிவைத்தார். இறையனுர் கள வியலுரை நக்கீரரால் செய்யப்பட்டதென்று இன்று வழங்குகிறது. அதுபோல் இவையு மிருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயப் படு கின்றனர்.

இந்த இரண்டு மருத்துவ முறைகளும் இந் தியாவில் ஒரே மாதிரியான செல்வாக்குடன் இருந்துவருகையில்,முகம்மதியர்கள் இங்கே குடி யேறினர்கள். அவர்கள் தம்முடன்யூனுனி முறை யைக் கொணர்ந்தனர். ஆயுர்வேதமும், சித் தவைத்தியமும் இந்தியாவிலேயே தோன்றின மையின், அவை நமது உடற்கூற்றுக்கு ஏற்றவை; மதவிரோதமற்றவை. யூனனி முறை அத்தகையதன்று. அது வேற்று நாட்டிலிருந்து வந்தது; நமக்குப் புதியது. முகம்மதியர்கள் அக்

காலத்தில் ஆள்பவர்களாக இருந்ததால் யூனானி முறை நாடெங்கும் எளிதிற் பரவலாயிற்று. அம் முறை இங்கு வந்ததால் ஆயுர்வேத சித்தவைத்திய முறைகளுக்கு இடர்ப்பாடு நேர்ந்தது என்பதற்குத் தக்க சான்றுகளில்லை. பல முகம்மதிய அரசர்கள் இந்து வைத்திய பண்டிதர்களையும் ஆதரித்து வந்ததாகத் தெரிகிறது.

பிற்காலத்தில், ஐரோப்பியர்கள் இந்நாட்டில் குடியேறிய காலத்திலிருந்துதான் சித்த வைத்தியம் மெல்ல மெல்ல க்ஷீணித்திருக்க வேண்டும். மேல்நாட்டார்கள் இந்தியாவைப் பிணிப்பதற்குத் தங்கள் வைத்திய முறையை ஒரு கருவியாகக் கொண்டனர் என்று சிலர் கூறுகின்றனர். ஜான் பஹ்டன் என்னும் ஆங்கிலேய வைத்திய நிபுணர், ஷாஜஹான் புதல்வி நோய் வாய்ப்பட்டிருக்கையில் அந்நோயைத் தீர்த்து ஆங்கிலேயருக்காக வங்கமாகாணத்திற் சில இடங்களையும் உரிமைகளையும் பெற்றார். பாதிரிமார்கள் பல இடங்களில் இலவச வைத்தியசாலைகளை நிறுவி அவற்றின் மூலம் இந்திய மக்களின் அன்பையும் ஆதரவையும் தேட முயன்றனர். இவற்றின் மூலம் பல இந்திய மக்கள் கிறிஸ்தவர்களாயினர்.

ஆங்கிலேய அரசு இங்கே நிலையாக நிறுவப்பட்ட பிறகு நாடெங்கும் மேல்நாட்டு முறை

யில் இலவச வைத்தியசாலைகள் தோன்றின. இந்திய இளைஞர்களுக்கு மேல்நாட்டு மருத்துவக் கல்வியைப் புகட்டப் பல மருத்துவப் பள்ளிகள் தோன்றின. சத்திரப் பயிற்சி மேல்நாட்டு வைத்திய முறையில் ஒரு சிறந்த பகுதியாக இருப்பதனாலும், பல இந்தியர்கள் மேல்நாட்டு முறைகளிற் கைதேர்ந்து வைத்தியர்களாக வந்துவிட்டமையாலும், மருந்துகள் இலவசமாகக் கிடைத்து வந்தமையாலும், மருந்துகள், புட்டிகள், ஆஸ்பத்திரியின் ஒழுங்குமுறை முதலியவற்றின் கவர்ச்சியினாலும் நம் நாட்டு மக்கள் மேனாட்டு வைத்திய முறையை அதிகமாக ஆதரிக்கத் தொடங்கினார்கள்.

இந்நிலையில் சித்த வைத்தியர்களுக்கும் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் நாட்டில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. அவர்களிடத்தில் பணம் கொடுத்து வைத்தியம் பார்த்துக் கொள்ளுகிறவர்களின் தொகை குறைந்து விட்டதனால் பரம்பரை வைத்தியர்கள் நாளடைவில் தம் தொழிலை விட்டொழித்தார்கள். அவர்கள் வழி வந்தவர்கள் வயிறுவளர்க்க வேறு தொழில்களைக் கைக்கொண்டனர். நாட்டு வைத்திய நூல்களில் பல இக்காலத்தில்தான் கவனிப்பாரற்றுச் செல்லரித்து அழிந்து போயிருக்கவேண்டும். ஆயுர்வேதத்தைவிடச் சித்தவைத்தியம் பரவியிருந்த இடம் அளவில் குறைந்ததாக

இருந்ததால், பின்னது அதிகமாக மங்கி விட்டது.

சித்த வைத்தியத்தின் வீழ்ச்சிக்குப் பிறி தொரு காரணமும் கூறலாம். தமிழ்க்கலைக ளெல்லாம் பழங்காலத்தில் பாணர், கூத்தர், கொத்தர், பொற்கொல்லர், வள்ளுவர் முதலிய வர்களால் போற்றி வளர்க்கப்பட்டு வந்தன. பிறகு நம்மவர் இத்தொழிலாளிகளை 'இழிகுலத் தவர்' என்று புறக்கணிக்கலாயினர். அதனல் இவர்கள் ஆதரவின்றி ஆக்கம் குன்றித் தம் தொழில்களை விட்டொழித்தனர். சித்தவைத்தி யம் சிலகாலமாகப் பரம்பரையாக நாவிதர் களால் பேணப்பட்டு வந்தது. நாவிதர் இன் றும் மருத்துவர் என்றும், பண்டிதர் என்றும் அழைக்கப்படுகின்றனர். நாவிதர் வைத்தியம் செய்தலை இன்றும் தமிழ்நாட்டின் சில பாகங் களிற் காணலாம். இவர்கள் 'இழிந்த தொழி லாளிகள்' என்ற தப்பெண்ணம் தமிழ் நாட்டில் பரவிவிட்டபின் இவர்களிடம் பண்டிதம் பார்த் துக் கொள்பவர்கள் அரியராயினர். நோய்வாய்ப் பட்டவர்களுக்கு உறுதுணையாக ஆயுர்வேதியர் தமிழ்நாட்டில் நிலைகொண்டதனல் 'பண்டிதர்' பாடு அம்பலமாயிற்று.

கடைச்சங்க காலத்தில் தமிழ் அரசர்கள் வைத்தியர்களுக்குச் சிறந்த நிலை யளித்துப்

பாதுகாத்து வந்தனர். அரசருக்கு ஆலோசனை கூறும் எண்பேராயத்தாரில் ஆயுர்வேதியரும் கூறப்படுதலைச் சங்க நூல்களிற் காணலாம். பிற்காலத்தில் தமிழ் வைத்தியமுறை மறைந்தமை வருந்தத்தக்க செய்தியேயாகும்.

நிற்க, ஏறக்குறைய பதினைந்து வருஷங்களுக்கு முன்பு தமிழ் மக்கள் விழித்துக்கொண்டார்கள். நாட்டன்பு அவர்கள்பால் தோன்றவே அவர்கள் தமிழ் வைத்திய முறைக்கு ஆக்கந்தேட முயன்றனர். இதே சமயத்தில் இந்நாட்டில் சுதேசி இயக்கம் தோன்றியதால், மேல்நாட்டு மருத்துவத்தால் நம்முடைய அளவற்ற பணம் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றன வென்ற காரணத்தைக் காட்டிச் சில பொருளாதார நிபுணர்கள் இந்திய வைத்திய முறையைப் புனருத்தாரணம் செய்யவேண்டுமென்று பலமாகக் கிளர்ச்சி செய்தார்கள். இவ்வித முயற்சிகளால் சித்தவைத்தியம் மீட்டும் சிறிது தலையெடுத்திருக்கிறது. அரசாங்கத்தார் நாட்டு வைத்தியத்தைக் கற்பிக்கும் கலாசாலை ஒன்று நிறுவிப் பட்டம் அளிக்கின்றனர். சில நகரசபைகள் நாட்டு வைத்தியத்துக்கு ஆதரவு தர முன்வந்துள்ளன. என்றாலும் பொது ஜனங்களுக்கு இதனிடம் இன்னும் அதிகப் பற்று ஏற்படவில்லை.

தமிழ் வைத்தியம் முற்காலத்தில் இருந்த உயரிய நிலையை அடையவேண்டுமானால் பின் வரும் ஆலோசனைகள் நம்மவர்களால் ஏற்றுக் கொள்ளப் படவேண்டும். தமிழில் நல்ல பயிற்சி யுள்ளவர்கள் பழைய வைத்திய நூல்களை ஓதி ஆராய்ந்து சிறந்த பதிப்புக்களாக வெளியிட வேண்டும். நாடெங்கும் இலவசத் தமிழ் வைத் தியசாலைகளை ஏற்படுத்தச் செல்வர்கள் முன் வரல்வேண்டும். தமிழ் வைத்திய முறைப்படி வைத்தியம் பார்த்துக் கொள்ளுவோருக்குக் குறைந்த பொருட்செலவோடு, நோயும் எளிதில் நீங்கி விடுமென்று உணர்ச்சி பொதுமக்களிடம் என்று பரவுகின்றதோ அன்றே இம்முறை ஓங்கும் என்பதை நாம் மறத்தலாகாது. வைத் திய விஷயங்களிற் பல, இன்னும் நூல் களிற் புகாமல் மக்களிடம் கைம்முறைகளாக நிலவி வருகின்றன. அவைகள் இரகசியமாக வும் போற்றப்படுகின்றன. அவற்றையெல்லாந் தொகுத்து நூல்வடிவில் வெளியிடுவதற்குச் சிலர் முன்வரல் வேண்டும். இன்னோரன்ன முறைகள் தேசபக்தர்களால் மேற்கொள்ளப் படுமாயின், சிலகாலத்தில் தமிழ் வைத்தியம் தான் இழந்துவிட்ட பழம் பெருமையை மீட்டும் பெற்றொளிரும் என்பதிற் சந்தேகமில்லை.

---

# குழல்

## 1. குழலின் பிறப்பு

**நா**கரிக மேம்பாடுற்ற மனித சமூகத்தில் நுண்கலைகளின் விளக்கத்தைக்கொண்டு அந் நாகரிகத்தின் அளவினை அறிந்துகொள்ளலாம். இசையும், நாடகமும், ஓவியமும் நுண்கலைகளில் தலைமை பெறுவனவென்பது இக் காலத்து அறிஞர் துணிபு. அக்கலைகளில் வீறிய சிறப்புடைய நாடுகள் நனி நாகரிகம் பெற்றவை என்று கூறுவதில் தடையொன்றுமில்லை.

பண்டைத் தமிழகத்தை நம் அகக்கண் கொண்டு சற்றுநோக்குவோமாயின், இந்த மூன்று கலைகளும் முச்சுடரைப்போல நாட்டில் களிநடம் புரிந்ததை உணரலாம். இசைக்கலையும் நாடகக்கலையும் தமிழின் மூன்றில் இரண்டு பங்காக வளர்ந்திருந்தன. ஓவியவளம் நாடுமுழுதும், கோயில்களிலும், வீடுகளிலும், நகரங்களிலும், பண்டங்களிலும், இன்றும் இலகிவருதலை அறிகின்றோம்; தமிழ் இலக்கியங்களிலுள்ள செய்திகள் நமக்குப் பண்டைத்தமிழர் ஓவியத்தின் தனித்தலைமைப் பெருவளத்தை முரசறைந்து முழக்குகின்றன.

தமிழகத்தின் நாகரிகச்சிறப்பின் அடையாள விளக்கங்களில் ஒன்ருகிய இசையைப் போற்ருதுவிட்ட பெரும்பாவத்தால் இன்று தமிழகம் தன் இசையை மண்ணிற்புதைத்து விட்டு வாடுகிறது. நம் தமிழ் இசைவளத்தைப் போலவே தமிழ் இசை வளத்தைப் பற்றிய செய்திகளும் நமக்குக் கனவிற்கண்ட பெருவாழ்வைப்போலத் தெரிகின்றன. "தேவரும் அசுரரும் கூடி மந்தரத்தை நாட்டி அமுதங்கடைந்தனர்; அவ்வமுதம் உயிரைத்தரும் பெருமருந்து; சாவா மூவாப் பெருநிலையைத் தருவது" என்று நாம் அறியும் புராணவரலாற்றுக்கும், "எங்கள் தமிழிசை வாழ்வில் இன்பத்தை உதவியது; தமிழ்ப்புலவர்களாலும் புரவலர்களாலும் மக்களாலும் போற்றப்பட்டது" என்று கூறும் ஆராய்ச்சிக்கும் வேறுபாடு அதிகமில்லை.

ஆனாலும் புதைந்த நகரத்தைத் தோண்டுகையில் உடைந்த பண்டங்கள் அகப்படுவது போல, இலக்கியப் புதையல்களுக்குள் சிக்கிக்கிடக்கும் சில சில இசைச் செய்திகள் துழாவி ஆராய்பவர்களுக்குப்புலப்படுகின்றன. அந்த உடைசல்களைப் பார்க்கும் பொழுதே, "இவை என்ன தேவசிருஷ்டியோ" என்று பரவசமுற்றுப் போற்றுகிறோம்.

தமிழரது இசையின் அமைப்போ தனிச் சிறப்பை யுடையது. அவர்களுடைய இசைக் கருவிகளின் இலக்கணம் பெரியது. தமிழர் இசைக் கருவிகளை ஐந்தாகப் பிரித்தனர். அவை தோற்கருவி, துளைக்கருவி, நரப்புக் கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்பன. அந்த ஐவகைக் கருவிகளுள் முதன் முதலில் உண்டான, இசையினிமையைத் தரும் கருவி புல்லாங்குழலென்று தோற்றுகிறது. அக்கருவி இயற்கையிலே அமைந்தது. அதனை அமைப்பதில் மற்றக் கருவிகளுக்குரிய கைவினைகள் பல வேண்டியதில்லை.

மனிதன் புல்லாங்குழலைக் கண்டறிந்த வரலாறு ஒருவாறு ஊகிக்கப்படுகிறது: அவன் வேட்டையாடும் காடுகளில் மூங்கில்களில் வண்டுகள் துளையிட்டிருந்தன.[1] அதன்வழியேசென்று வெளிப்போந்த காற்றானது ஒருவித ஒலியை எழுப்பியது; அதனை அறிந்த மனிதன் செயற்கையில் மூங்கிலைத் துளைத்துக் காற்றை ஊதிப் பார்த்தான். அப்படிப் பார்க்கையில் எழுந்த ஒலியை ஒழுங்குபடுத்திக்கொண்டான். இசை

1. வண்டுகளால் துளைக்கப்பட்ட துளைகளின் வழியே காற்றுச் சஞ்சரிக்கும்போது இசை ஒலி எழுதற்குக் காரணமாகிய ஒருவகை மூங்கிலை வடநூலார் கீசகமென்பர்.

யறிவு வளர வளர ஸ்வரங்களுக்கேற்ற துளை களையிட்டுக் குழலை இசைக்கருவிகளில் நாயக மாக்கினன்.

இச்செய்தியை அகநானூற்றுச் செய்யு ளொன்று குறிப்பிக்கின்றது. மயிலென்னும் ஆடுமகள் காடாகிய அரங்கில் ஆடுவதைப் புனையவந்த புலவர் அக்கூத்திற்குரிய இசைக் கருவிகளை அமைக்கின்றார்; அங்கே,

"ஆடமை குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாக" (அகம். 82)

உதவுகின்றது. ஆடுகின்ற மூங்கில் துளைக்கப் பட்டு விளங்கும் துளைகளின் வழியே செல்லும் மேல்காற்றானது குழலின் இசையைப்போன்ற தென்று கூறும் இவ்வடிகள் குழலின் பிறப்பை நமக்குக் குறிப்பிக்கின்றன அல்லவா? இத னைப் பின்னும் விளக்கி,

"தும்பிவாய் துளைக்கப்பட்ட கீசகம் வாயுத் தன்னால்
வம்பவாய் குழலி னேங்க" (சூளாமணி, சீய. 194)

என்று தோலாமொழித்தேவர் பாடினர்.

காட்டிலே கண்ட இந்த ஆச்சரியத்தை அங்கே உள்ளவர்களே முதன்முதல் அறிந்த னர். ஆதலின் அந்தக் கருவியை அவர்கள் தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்டார்கள். விசித்திரமாக இது தோற்றவில்லையா? தமிழ்

நூன்மரபு அப்படியே சொல்லுகிறது. தமிழர் காடுகளை முல்லைநிலம் என்பர். அந்நிலத்துக் குடிகள் கோவலர். அவர்களுக்கு வாத்தியம் புல் லாங்குழல். கோவலர் சிகாமணியாகிய கண்ண னே தன்னுடைய குலத்திற்கு ஏற்பக் குழலைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டனன். அத னாலேதான் தமிழ்ப் புலவர்களெல்லாம் 'குழற் கோவலர்' என்றும் 'ஆயர்வாய் வேய்' என் றும் குழலை ஆயர்களுக்கே ஏகபோக உரிமை யாக்கி யிருக்கின்றனர்.

## 2. குழற் காட்சிகள்

குழலைக்கொண்டு கோவலர்கள் ஆட்சி புரிந்த அழகைத் தமிழர்கள் வருணித்த பகுதி கள் அளவிறந்தன. கண்ணன் கோவலர் குழாத்துடனும் பசுக்கூட்டங்களுடனும் காட்டுக் குச் செல்கின்றான்; இயல்பாகவே கட்டறியாது அவிழ்த்துவிட்ட மாடுகள் காலார நடைபழகி, வயிறார மேய்ந்து அசைபோடுகின்றன. கண் ணுக் கெட்டியவரையிலும் அதற்கு அப்பா லும், ஒரேகாடாக உள்ள பிரதேசத்தில் புல் லுக்குபஞ்சமேது? மாடுகள் 'திக்குக்கு' ஒன்றாக மனம்போனபடி சென்று மேய்கின்றன; இங்கே கண்ணன் மற்றக் கோவலர்களுடன் சேர்ந்து கூத்தடிக்கிறான்; குரவையாடுகிறான்.

மாலைக்காலம் ஜில்லென்ற தென்றலோடு வருகிறது. ஊரில், வீட்டு வாசலில், பெண்களும் பெரியவர்களும் கண்ணனையும், இளங்கோவலர்களையும், பசுக்கூட்டங்களையும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

கண்ட இடங்களிற் சிதறிச்சென்ற பசுக்களை ஒன்றுதிரட்டி யல்லவா ஊருக்கு ஓட்டிச் செல்லவேண்டும்? மூலைமுடுக்கெல்லாம் சென்று தேடிவர நேரமேது! கண்ணனிடம் சூட்சுமம் இருக்கிறது; அவனுக்குத் தெரியும் அந்த மந்திரம்.

தன் இடையில் செருகியிருக்கும் குழலையெடுக்கின்றான்; ஊதுகின்றான். என்ன மாயம்! அத்தனை பசுக்களும், கன்றுகளும், காளைகளும் குதித்துக்கொண்டு ஓடிவருகின்றன; ஆயர்கள் கூட அப்படியே. ஊதுகுழலை ஊதினால் சாரணர்களும் போலீஸ்காரர்களும் ஒன்று கூடுவதை இந்நாளிலே பார்க்கிறோம். இந்தக் கண்ணன் ஒருசாண் குழலால் அத்தனை விலங்குகளையும் மயக்கி அழைத்துவிடுகிறான்.

குழலால் பசுவை இங்ஙனம் கூட்டிச் செல்லும் மாயவித்தையை நாம் பிறநாட்டார் கதைகளிலும் அறிகிறோம். ஹேமலின் நகரத்துக்

[1]'குழற்சித்தன்' எலிகளையும் பசுக்களையும் குழந்தைகளையும் குழலூதிக் கூவித்த செய்தியை ஓர் ஆங்கிலச் செய்யுள் அறிவிக்கின்றது. எல்லாம் குழலின் பெருமையையே விளக்குகின்றன.

கண்ணன் குழலூதுஞ் சிறப்பை ஒரு புலவர் சித்திரித்துக் காட்டுகின்றார்:

"குறித்தமுகில் பந்தரிட்டுக்
குறுந்துளி தூற்றிடவாயர்
தறித்தமர மத்தனையுந்
தழைத்தலர்ந்து பழுத்துதவக்
கடும்புலிக ளயர்ந்து[2] சித்ர
காயமெனும் பெயர்விளக்கக்
கொடும்பணிகள் மாலையதாய்க்
குலரத்ன விளக்கேற்றக்
கருங்கற்றான் வெண்ணெயெனக்
கரைந்தோட விரைந்தோடி
வருங்கற்றா னிமைப்பொழிய
மழவிடையங் கயர்ந்துநிற்ப

---

1. Pied Piper of Hamelin

2. சித்திரகாயம் என்பது புலியின் பெயர்களுள் ஒன்று; சித்திரத்தில் எழுதிய உருவம் என்பது மறு பொருள்.

மிகவிளங்கோ வியரெழுத
வெள்கியத்ரி பங்கியுடன்
சுகவிளங்கோ வியர் [1] மழலை
தொளித்தகுழல் இசைத்தோய்கேள்"
(அழகர் கலம்பகம்.)

ஓவியர்கள் எழுதுவதற்கு வெள்கும் ஓர் ஓவியத்தை இந்தக் கவிஞர் தமது சொல்லால் சித்திரித்துக் காட்டும் வியப்புத்தான் என்னே!

இயற்கையின் வேகங்களும், தாவரத்தின் வளர்ச்சியும், புலியின் கடுஞ்சினமும், பாம்பின் சீற்றமும், கல்லின் வன்மையும், கன்றையுடைய பசுவின் வாத்ஸல்யமும், மழவிடையின் காதலுணர்ச்சியும் ஒன்ருக ஸ்தம்பித்து இசையுணர்ச்சியில் கலந்து புதைந்து உருகிவிடும் இந்த நிலையை ஓவியர்கள் எப்படி எழுதப் போகிருர்கள்!

பெரியபுராணத்திற் புகழப்படும் நாயன்மார்களுள் ஒருவராகிய ஆனய நாயனரென்பவர் குழலூதுந் தொண்டினல் இறைவனை வழிபட்டார். அவர் ஐந்தெழுத்தைக் குழலில் அமைத்து ஊதியதாகப்புராணம் கூறுகின்றது.

## 3. குழலின் சிறப்பு

மற்ற இசைக் கருவிகளைக் காட்டிலும் குழல் மிக எளிதிலே அமைத்துக் கொள்ளுதற்

1. மிக விளங்கு ஓவியர். சுக இளம் கோவியர்.

குரியது; எனினும் இசையின் இனிமையை மிக நன்ருக வெளிப்படுத்தற் கேற்றது. இதன் ஒலி நெடுந்தூரம்வரையிற் கேட்கும்.

குழல், யாழ், மத்தளம், குடமுழா, இடக்கை யென்னும் ஐந்தும் குயிலுவக் கருவி யெனப் படும். இவ்வைந்தனுள், 'குழல் வழி யாழும், யாழ் வழி முறையாக மற்றைய பிறவும் நின்றிசைக் கும்' என்று ஆன்ருேர்கள் கூறியிருக்கின் றன ராதலின், குழலானது இசைக்கருவிகளுள் தலைமையை யுடையது என்பது பெறப்படும்.

"குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்"

என்றவிடத்து வள்ளுவரும் குழலை முதற்கண் அமைத்திருக்கிருர்.

குழலின் வகைகளாகிய துளைக்கருவிகளே பெருங் குழுவினரால் கேட்டு இன்புறும் சிறப் புடையனவாக இருக்கின்றன. பாம்பை யடக் கும் மகடியும் குழலின் இனத்தைச் சேர்ந்ததே யாகும். விலங்கினங்களை மயக்கும் ஆற்றல் குழ லினக் கருவிகட்கு உண்டென்பதை அம் மகடி இன்றும் வெளியாக்கிக் கொண்டு விளங்குகின் றது.

## 4. பெயர்க் காரணம்

குழலென்பது உள்ளே துளையை யுடைய பொருளை உணர்த்துமென்பது யாவரும் அறிந்

தது. குழலை நாம் புல்லாங்குழலென்று கூறுகின்றோம். இயற்கையில் விளைந்த மூங்கிற் குழாயை எடுத்துத் தீக்கடை கோலால் கோவலர் குழலை அமைத்துக் கொண்டனர். மூங்கிலாலே செய்யப்பட்ட காரணம் பற்றிக் குழல் புல்லாங் குழலென்னும் பெயர் பெற்றது; வேய்ங்குழல், வங்கியம் என்பனவும் இக்காரணம் பற்றியே எழுந்த பெயர்களாம். உள்ளே வயிரம் இல்லாமல் வெளிப்புறம் மட்டும் உறுதியாகவுள்ள தென்னை, பனை, கமுகு, மூங்கில் முதலியவற்றைப் **புல்**[1] லென்று கூறுதல் தமிழ் மரபு. மூங்கில் புல்லின் வகையைச் சார்ந்ததாதலின், அதனாற் செய்யப்பட்ட குழல் புல்லாங் குழலாயிற்று. வேயென்பது மூங்கிலின் பெயராதலின் வேய்ங் குழலென்பது மூங்கிலாலாகிய குழலென்னும் பொருளைத் தரும். வடமொழியில் வம்சம் என்ற சொல் மூங்கிலைக் குறிக்கும்; அது தமிழில் வங்கியமெனத் திரிந்து வந்தது. மூங்கிற்குரிய அப்பெயர் ஆகு பெயராய்க் குழலுக்கும் வழங்குவதாயிற்று. தமிழ் நூல்களிற் பல இடங்களில் மூங்கிற்குரிய பெயர்களெல்லாம் ஆகு பெயராகக் குழலுக்கும் வழங்கி வருகின்றன.

---

1. "புறக்கா ழனவே புல்லென மொழிப" தொல். மரபு. சூ. 84.

குழல், வேறு மரங்களாலும் உலோகங்களாலும் செய்யப்படுவதுண்டேனும், மூதன் முதலில் உண்டானமைபற்றி இங்ஙனம் மூங்கிற்குரிய பெயர்களால் வழங்கப்படுகிறது.

## 5. குழலின் வகை

குழல் மூங்கிலாலன்றி, வெண்கலத்தாலும், சந்தனம், செங்காலி, கருங்காலி முதலிய மரங்களாலும் செய்யப்படுவதுண்டு. ஆயர்கள் கொன்றைப் பழத்தைத் துளையிட்டு உள்ளே யிருக்கும் விதைகளை எடுத்துவிட்டு அதைக் குழலாக உபயோகித்தனர். அது **கொன்றைக்குழல்** எனப்படும். முல்லைக் கொடியால் முப்புரியாகப் பின்னிய வளையை மூங்கிலின் வாயில் செறித்து ஊதலின் அது **முல்லைக் குழ**லென்று வழங்கப்பட்டு வந்தது.

புல்லாங் குழலின் மூடியுள்ள பாகத்தில் உலோகத்தால் பூண் செய்தமைத்து அழகுபடுத்துவதை இன்றும் பார்க்கிறோம். பண்டைக் காலத்தில் ஓர் அடையாளமாக அத்தகைய கட்டைக் கட்டி வந்தார்கள். அதற்கு **அணைசு** என்று பெயர். ஆம்பல் மலரைப்போல் அணைசு பண்ணி அதனைக் குழலுக்குச் செறித்து ஊதினர்; அக்குழல் **ஆம்பற் குழ**லெனப் பட்டது.

சிறு குழந்தைகள் பூவரச இலையையும், தென்னை ஓலையையும் சுருட்டிக் குழலாக ஊது வதை நாம் பார்க்கிறோம். இந்தக் குழல் இலைக்குழல் எனப்படும். ஆம்பலிலையினால் செய்த குழலையும் ஆம்பற் குழலென்று பெரியோர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

"இலைத்தடத்த குழலூதி யாயர் மாதர்
இனவளை கொண்டான்"

(பெரிய திருமொழி 6 : 7. 9)

"அண்ணல் இலைக்குழ லூதிநஞ் சேரிக்கே
அல்லில் தான் வந்தபின்னை"

(ஷை 10 , 7 : 6)

என்பவற்றில் இலைக்குழல் கூறப்பட்டிருக்கிறது.

குழலை மூங்கிலால் அமைப்பது உத்தமம்; வெண்கலத்தில் இயற்றுவது மத்திமம்; ஏனையவற்றாற் செய்வது அதமமாம்.[1]

குழல்களுள் ஐந்து துளைகள், ஏழு துளைகள், ஒன்பது துளைகள் என்பன முறையே அமைந்தவை உண்டு; ஐந்து துளைகளையுடையது **குறுவங்கியம்** எனப்படும். ஏழு துளைகளை

1. சிலப். அரங்கேற்றுக் காதை, 26, அடியார்.

யுடையது நெடுவங்கியம் எனப்படும்[1]; இந்நெடு வங்கியம் தூம்பெனவும் சொல்லப்படும்; யானை மூச்சுவிடுதல் போன்ற பெருமுழக்க முடையது பற்றிக் களிற்றுயிர்த் தூம்பெனவும் வழங்கும்.

## 6. குழல் அமைக்கும் முறை

குழலுக்குரிய மூங்கில் இன்ன இடத்திலே, இத்தகைய வளர்ச்சியோடும் இலக்கணத்தோடும் வளர்ந்ததாக இருக்கவேண்டு மென்றும், அந்த மூங்கில் நுனியிலிருந்து எட்டாங்கணுவில் அரிந்து எடுத்துக் கொள்ளப்படு மென்றும், இசை நூல்கள் சில வரையறைகளைக் கூறுகின்றன. அந்நூல்களிற் பெரும்பாலன இக்காலத்தில் அழிந்துவிட்ட போதிலும் அவற்றிலுள்ள சில கருத்துக்கள் தமிழிலக்கியங்களிலே கூறப்படுகின்றன.

"முந்தைமறை நூன்மரபின் மொழிந்த முறை யெழுந்தவேய்
அந்தமுதல் நாலிரண்டி லரிந்துநரம் புறுதானம்
வந்துதுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
அந்தமில்சீ ரிடையிட்டி னங்குலியெண் களினமைத்து"

(பெரிய புராணம், ஆனாயநாயனார்)

என்பதில் குழலமைக்கும் முறை சுருக்கமாகக் காணப்படுகின்றது.

---

1. பரிபாடல், 8 : 22.

கருங்காலி, செங்காலி முதலிய மரங்களினால் குழலை அமைக்கும்போது, அம்மரங்கள் உயர்ந்த, ஒத்த நிலத்திலே, பெருக வளர்ந்தனவாக இருக்கவேண்டும். நாலு திசைகளிலிருந்து வரும் காற்று மயங்காத நிலத்திலே வளர்ந்திருக்க வேண்டும். நாலு காற்றும் மயங்கின் நாதமில்லை யென்பர் அடியார்க்கு நல்லார். இளமையும் நெடும்பிராயமும் இல்லாமல், ஒரு புருஷ ஆயுளுள்ள (100-ஷ) பெரிய மரத்தை வெட்டி, ஒரு புருஷாகாரமாகச் செய்து, அதனை நிழலிலே ஆறும்படி இட்டு வைக்கவேண்டும்; அப்பால் திருகுதல், பிளத்தல், போழ்ந்துபடுதல் இவையின்மை அறிந்து, ஒருவருஷம் சென்றபின், இலக்கண வகையால் குழலை அமைப்பர்.

குழலின் நீளம் 20-விரல்[1]; சுற்றளவு நாலரை விரல்; துளையிடும்போது சுற்றுப்புறத்தில் நெல்லரிசியிற் பாதியளவு மரம் விட்டுக் கடையவேண்டும். பிறகு வெண்கலத்தாலே அணைசு பண்ணி, இடமுகத்தை அடைத்து வலமுகம் வெளியாக விடப்படவேண்டும்.

புல்லாங் குழலின் துளையளவிலக்கணமும் விளக்கமாகத் தமிழ் நூல்களிற் கூறப்பட்டுள்

---

1. விரலென்பது அக்காலத்தில் வழங்கி வந்த ஒருவகை நீட்டலளவைப் பெயர்.

ளது. இருபது விரல் நீளமுள்ள குழலிலே இரண்டு நுனிகளிலும் இவ்விரண்டு விரல் விட்டுத் துளைகளை அமைக்கவேண்டும். அணைசுக்குப் பக்கத்திலுள்ள துளை வாய்வைத்து ஊதுவதற்குரியது. இதற்கு ஏழுவிரல் இடைவெளி விட்டுப் பின்னால் நின்ற ஒன்பது விரல் அளவை எட்டுத்துளைகளுக்குச் சமனாகப் பகிர்ந்துகொடுத்தல் வேண்டும். இந்த எட்டுத்துளைகளில் கடைசியில் உள்ள துளை முத்திரை யெனப்படும். நின்ற ஏழில், ஏழு விரல்களை வைத்து ஊதுவார்கள். துளையின் அளவு நெல்லரிசியின் அளவாகும். இரண்டு துளைகளுக்கும் இடையே யுள்ள இடம் ஒருவிரல் அளவாகும்.

ஊதுவதற்குப் பயன்படும் ஏழுவிரல்கள்: இடக்கையில் பெருவிரலும் சிறுவிரலும் நீக்கி மற்றைய மூன்று விரல்களும், வலக்கையில் பெருவிரலொழித்த நான்கு விரல்களும், ஆக ஏழுவிரல்களாம். புல்லாங்குழலில் ஏழுதுளைகளிலும் எழு சுரங்கள் பிறக்கும்.

## 7. குழலைப்பற்றிய பிற செய்திகள்

குழல் முல்லை நிலத்துக்குரியது; மாலைக் காலத்தில் ஆயர்களால் வாசிக்கப்படுவது. கணவரைப் பிரிந்து இருக்கும் மகளிர் மாலைக்

காலத்தில் வருந்துவர். அவர்களுடைய வருத்தத்தை மிகுதிப்படுத்துவன சந்திரன், கடல் முதலியன. அவற்றுள் குழலோசையும் ஒன்று. மாலைக்காலம் தென்றல் துருத்தியினால் அள்ளி வீசப்படும் அழலைச்சொரிகின்றது; அது வருவதற்கு முன் ஆயர்கள் தம் பசுக்களை வீட்டுக்குக் கொண்டுவருகிறார்கள். அவர்கள் வரும் பொழுதே உத்ஸாகத்தினால் குழலை ஊதி வருகின்றார்கள்; அந்தக் குழலோசை மாலையென்னும் பேரழல் வருவதைக் குறிக்கும் தூதாக இருக்கிறது. அதுமட்டுமா? மாலை வந்த பின்பும் இடைவிடாது இசைக்கின்ற அக்குழலோசை உயிரைக் கொல்லுகின்றது. தலைவனைப் பிரிந்த தலைவிக்குக் குழல் செய்யும் துன்பம் கணக்கில் அடங்குவதன்று. இதனைக் குறள்,

"அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை"

என்று சுருங்கக் கூறும்.

குழலோசை நல்ல நிமித்தங்களுள் ஒன்றாகவும் கூறப்படும்.

"அணிமாலைக் கேள்வற் றரூஉ மாராயன்
மணிமாலை யூதுங் குழல்"

(கலித்தொகை, 101 : 33 - 4.)

"ஆயர் ஈண்டு ஊதுகின்ற குழல் நீலமணி போலும் காயாம்பூவாற் செய்த மாலையினை அணியும் இயல்பினையுடைய கேள்வனை நமக்குத் தருதற்கு நன்னிமித்தமாக இசைத்தது" என்பது இதன் உரை.

குழலைப்பற்றிப் பழைய தமிழ்நூல்களுள் கூறப்பட்டுள்ள செய்திகள் ஒருவாறு மேலே தொகுத்துக் காட்டப்பெற்றன. இப்படியே முரசு, யாழ், தமிழர் கூத்துவகைகள், தமிழிசை, ஓவியம் முதலிய வித்தகக் கலையைப் பற்றிய பிறசெய்திகளும் அந்நூல்களுள் புதைந்து கிடக்கின்றன.

# தமிழிற் பிறமொழிக் கலப்பு

ஆதியில் மக்கள் அறிவையும் ஆற்றலையும் குறைந்த அளவிலேயே பெற்று ஏறக்குறைய விலங்குகள் போலவே வாழ்ந்து வந்தார்கள். அக்காலை அவர்கள் ஒருவித மொழியையும் பேசினதில்லை. முதலில் சைகைகள் வாயிலாகவும், அதன் பின் பொருளற்ற ஒலிகளின் வாயிலாகவும், ஒருவர் கருத்தை மற்றவர் உணர்ந்து கொண்டனர். அதன் பின்னரே பேச்சு வழக்கு ஆரம்பமாயிற்று. பேச்சுவழக்கு ஏற்பட்ட சில காலத்தில் வரிவடிவில் எழுத்துக்கள் கண்டறியப்பட்டன. வரியெழுத்தில்லாத மொழிகளிற் பல இன்றும் வழங்கி வருகின்றன. எழுத்துக்கள் கண்டறியப்பட்ட பிறகு மனிதர் தம் உள்ளத்து இன்பத்தைப் பெருக்கிக்கொள்ளக்கருதி இலக்கியங்களை எழுதத்தொடங்கினர். இலக்கியங்களுக்கு இலக்கண அமைப்பு அவசியமாயிற்று. [1] பொதுவாக எந்த மொழியும் மேற்கூறிய முறைப்படியே வளர்ந்து செம்மையுற்றிருக்க வேண்டுமென்பது மொழிநூலோரின் துணிபு.

---

1. "இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலின்"—நன்னூல்.

உலகத்திலே பழைய மொழிகளாகக் கருதப்படும் தமிழ், ஆரியம், ஹீப்ரூ, கிரீக் அராபிக் முதலியவற்றில் தமிழ் மிகவும் பழமையான தொன்றும்.

தமிழின் தொன்மையை விளக்க இதுபோழ்து நமக்குச் சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. பூதத்துவ சாஸ்திர அறிஞர்களிற் சிலர், தமிழ் வழங்கும் நிலம் மற்றெல்லா நிலங்களினும் மிகப் பழமையானதென்பது இதன்கண் கிடக்கும் கற்களால் தெரியவருகின்றதென்று கூறியிருக்கின்றனர். வேறு சிலர், முதல் மனிதன் தமிழ் நாட்டிலேதான் தோன்றினன் என்று முடிவுகட்டி யிருக்கின்றனர். சிந்துநதி பாயும் பிரதேசமாகிய **மொஹெஞ்சதாரோ** முதலிய இடங்களில் தோண்டி யெடுக்கப்பட்ட பொருள்களாற் பல்லாயிர வருஷங்களுக்குமுன் தமிழர் இருந்து வந்தமை புலனாகின்றது.

திருக்குறளுக்கு உரையெழுதவந்த பரிமேலழகர், [1] பழங்குடி யென்னும் சொல்லுக்குத் 'தொன்று தொட்டு வருகின்ற குடி' என்று பொருள் கூறி, '**தோன்றுதொட்டுவருதல் சேரசோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்**' என்று விளக்கியுள்ளார். உல

1. திருக்குறள், 955.

கத் தோற்றத்தின்போது தமிழ் மக்கள் இருந் திருத்தல் வேண்டுமென்பது அவர் கருத்தாதல் இதனுல் தெரிய வருகிறது. **புறப்பொருள் வெண்பா மாலை** என்ற நூலுள் தமிழ்வீரரின் [1] குடிநிலையை விளக்கவந்த வெண்பாவுள், "கற்ருேன்றி மண் தோன்ருக் காலத்தே வாளோடு, முற்ருேன்றி மூத்த குடி" என்று அதன் ஆசிரியர் கூறித் துள்ளார். 'உகாந்த வெள்ளம் விட்டு நீங்க, முற் பட மலைதோன்றிப் பூமி தோன்ருத அளவிலே வாளுடனே எல்லாரிலும் முற்பட மலையிடத்திலே தோன்றிப் பழையதாகிய குடி' என்பது அவ்வடிகளின் பொருள். பரிமேலழக ருக்குக் காலத்தால் முற்பட்ட இந்நூலாசிரிய ருக்கும் தமிழ் மக்கள் படைப்புக்காலந் தொட்டு மேப்பட்டு வருகின்றவர்கள் என்ற கருத்தாதல் இங்கே அறியத்தக்கது. ஐந்து நிலங்களிலே மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகிய குறிஞ்சி நிலம் முற்கூறப்படும் வழக்கினைக்கொண்டு தமிழர்கள் 'முற்பட மலையிடத்திலே தோன்றி' யிருத்தல் வேண்டுமென்று ஊகிக்க இடமேற் படுகின்றது. இவ்வளவுங் கூறியது, தமிழ்மொழி மற்றெல்லா மொழிகளிலும் மிகப் பழமை வாய்ந்ததென்பதை விளக்குதற்கே.

---

1. புறப்பொருள் வெண்பாமாலை, கரந்தை: 14.

இத்தகைய பழமை வாய்ந்த தமிழ் பல்வேறு காலங்களில் பலதுறைகளில் வளர்ச்சியுற்று வந்திருக்கிறது; வந்துகொண்டிருக்கிறது. இலக்கியத் துறையில் முற்காலத்தில் பிரபந்தங்கள் இல்லை; நாளடைவில் தமிழ் பலவகைப் பிரபந்தங்களைக் கண்டது; உரைநடையை உலகியலை நோக்கி இன்றியமையாததாக்கிக் கொண்டு அதனைத் திருத்திக்கொண்டு வருகின்றது. இலக்கணத் துறையில் மூன்றாகவிருந்த இலக்கணங்களை, நாளாக ஆக ஐந்தாகக் கணக்கிட்டுக்கொண்டது; பாட்டியல் என்ற பிறிதோரிலக்கணத்தையும் மேற்கொண்டது. பாக்களை விரிவுபடுத்திப் பாவினங்களைத் தழுவிக்கொண்டது. தமிழ் மொழி இங்ஙனம் பல துறைகளில் வளர்ச்சியுற்ற சரிதையைத் தனித்தனியாக ஆராய்ந்து எழுதினால் அவ்வாராய்ச்சி ஒரு பெரிய நூலாக முடியும்.

ஒரு சமூகத்தாருடன் மற்றொரு சமூகத்தார் பழக நேருங்காலங்களில் ஒருவருடைய பாஷைச் சொற்கள் மற்றொருவருடைய பாஷையிற் புகுவது இயல்பு. இவ்விதக் கலப்பை எல்லா மொழிகளுள்ளும் காணலாம். நாம் புதியவர்களுடன் பழக நேரும் காலங்களில், நம் நாட்டிலில்லாமல் அவர்கள் கொணரும் புதிய பொருள்களைக்

கண்டால் அவற்றை அவர்கள் அமைத்த பெயர்களாலேயே நாமும் குறிக்கின்றோம். அப்பொருள்களுக்குப் புதிய (ஆக்கச்) சொற்களைத் தமிழில் ஆக்கிக்கொள்ளல் வேண்டும் என்ற உணர்ச்சி பொது மக்களிடம் தோன்றாமையே இதற்குக் காரணம். இவ்வகையில் ஒரு மொழியிலுள்ள சொற்கள் மற்றொரு மொழியிற் புகுவது இயல்பே யன்றோ! பேச்சு வழக்கிலுள்ள எந்த மொழியும் பிற பாஷைச் சொற்கலப்புற்றதாகவே இருக்கும்; இதற்கு விலக்கே இல்லை.

தமிழர் பண்டைக் காலத்தில் அநேகமாக உலக முழுவதும் சஞ்சாரம் சென்று வந்தமையையும், பிற நாட்டார் தமிழர்களுடன் வியாபாரத் துறையில் தொடர்பு வைத்திருந்தமையையும் பழைய நூல்களிற் சில அறிகுறிகளால் அறியலாகும். அக்காலத்திலே ஒருவர் மொழியிலுள்ள சொற்கள் மற்றொருவரின் மொழியில் இடம் பெற்றிருத்தல்வேண்டும். தோகை (மயில்) மாங்காய், அரிசி, கருவாப்பட்டை, இஞ்சி முதலிய பொருள்களை மேல் நாட்டார் முதன்முதல் தமிழர்களால் அறிந்துகொண்டனர். ஆகையால் அவர்கள் அப்பொருள்களின் தமிழ்ப் பெயர்களையே தங்கள் மொழிகளிலும் வழங்கலாயினர். இவ்வகையில் இன்னும் பல தமிழ்ச்சொற்கள் மேனாட்டுப் பழைய மொழிகளிற் புகுந்து விட்

டன. இது போலவே பிறமொழிகளின் சொற்கள் தமிழிலும் புகுந்திருத்தல் இயல்பேயாகும்.

ஒரு பாஷைச் சொற்கள் மற்றொரு பாஷையிற் புகுந்துவிட்டதனால் அந்த வேறு பாஷையின் சிறப் புஒருவாற்றானும் குறைந்துவிடாது. இதனை எவரும் நினைவில் வைத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் பல பாஷைச் சொற்கள் மல்கிக் காணப்படுகின்றன. அதனால் அம்மொழிக்கு இழுக்கொன்றுமில்லையே! இன்று அம்மொழியன்றோ உயர்நிலையில் வளம் வாய்ந்து உலகிற்கே பொதுமொழியென்று எவரும் சொல்லத்தக்கவாறு விளங்குகின்றது! பிறமொழிகளின் கூட்டுறவினால் தமிழ்மொழி இழுக்கடைந்து விட்டதாகக் கருதுவது சரியன்று. அக்கூட்டுறவு தமிழிற்குப் பலவழிகளில் ஆக்கத்தை அளித்திருக்கின்றது.

ஒருகாலத்தில், தமிழ், இந்தியா முழுவதும் பரவி இருந்தது. ஆரியம் முதலிய மொழிகள் இந்தியாவுக்கு வந்தபின் தெற்கேயன்றி மற்றப் பிரதேசங்களில் இருந்த தமிழ், பிறமொழிக் கலப்பைத் தாராளமாக ஏற்றுக்கொண்டு வேறு மொழிகள் என்று சொல்லத்தக்க நிலைமையை அடைந்தது. இப்பொழுது இந்தியாவிலுள்ள மொழிகளில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலை

யாளம், துளு, கொடகு, தோட, கோட, குருக், கோண்டி. மால்டோ, பிராஹூமி என்ற மொழிகள் திராவிட பாஷா சமூகத்தைச் சார்ந்தவை என்பர் மொழிநூலோர். அவையெல்லாம் ஆதியில் தமிழாகவே இருந்து, பிறகு வேறு மொழிகளின் கலப்பை யேற்றுப் பல பிரிவினவாக மாறியிருத்தல்வேண்டும். ஒரு மரத்திலிருந்து சில கிளைகளும், அவற்றிலிருந்து பல கோடுகளும், அவற்றிலிருந்து பல வளார்களும் பிரிந்திருப்பதுபோல், இப்பிரிவுகளும் தோன்றியிருக்கலாம். தமிழிலிருந்து பிரிந்துபோன பாஷைகளிற் பல வடமொழியையும் அதன் வழிமொழியாகிய பிராகிருதத்தையும் பெரும்பாலும் தழுவிக்கொண்டு, இன்று தம் தாய்மொழி தமிழன்று என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டன.

தமிழும் சங்க காலத்திலிருந்ததுபோல் இப்பொழுது இல்லை. நூல் வழக்கு ஒருவிதமாகவும் பேச்சு வழக்கு வேறுவிதமாகவும் உள்ளன. நூல் வழக்கிலேயும் சங்ககாலத்துக்கும் பிற்காலத்துக்கும் நெடுவாசி வேற்றுமை காணப்படுகிறது. இம்மாறுபாட்டுக்கு ஏற்ப அவ்வக் காலங்களில் அறிஞர்கள் இலக்கணம் அமைத்து ஒரு நியதியை நிலைநாட்ட முன் வந்தனர். அதனல், தமிழ் பிறமொழிக் கலப்பால் அல்லலுறாமல் பலதுறைகளில் வளர்ச்சியுற்றே வந்தது.

நிற்க; தமிழிலே புகுந்துள்ள பிறபாஷைச் சொற்களில் மிகுதியாகக் காணப்படுபவை ஆரியச் சொற்களேயாம். முதன் முதலில் தமிழோடு கலந்த சொற்களும் ஆரியச் சொற்களாகவே இருத்தல் வேண்டும். தமிழிற் புகுந்த ஆரியச்சொற்களைத் தமிழர் வடசோல் என்பர். வட சொல்லின் இலக்கணம் தோல்காப்பியத்திலேயே கூறப்படுகின்றது.[1] இப்பொழுது நமக்குக் கிடைத்துள்ள பழைய நூல்களிற் பழமை வாய்ந்தது தொல்காப்பியமே.

ஆரியமொழியின் தொடர்பினால் தமிழ் பிற்காலத்தில் பல துறைகளில் வளர்ந்தோங்கியது. தமிழிலக்கணங்களிற் சில வடமொழிச் சார்பைப் பின்பற்றிச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இலக்கணம் என்ற சொல் லக்ஷணம் என்ற ஆரியச் சொல்லின் திரிபாகும் என்பர். தமிழிலே அணி யென்று ஓரிலக்கணம் விரிவாக இருந்ததில்லை. பிற்காலப் புலவர்கள் வடமொழிப் போக்கை ஒட்டித் தமிழில் அணியிலக்கணத்தை வடமொழியினின்றும் பெயர்த்துக் கொண்டனர். தமிழிலுள்ள சோதிடம், சமய நூல் முதலியவற்றுள் வடசொற்கள் அதிக

---

1. "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

மாகப் பயின்றிருக்கின்றன. தமிழரின் சோதிடம், சமயம், மருத்துவம் முதலியன வடமொழியின் தொடர்பினல் ஆக்கம் பெற்றிருத்தல் வேண்டுமென்பது இதனுற் புலனுகின்றது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணங்களையும் தவிரப் பாட்டியல் என்ஞேரிலக்கணம் தமிழில் இருப்பதாக முன்னர்க் கூறினேன். அது பிரபந்தங்களின் இலக்கணம், முதன் மொழிப் பொருத்தம் முதலியவற்றைக் கூறுகின்றது. அதிற் கூறப்படும் பிரபந்தங்களின் பெயர்களிற் பல, வடமொழிப்பெயர்களாகவோ இரண்டன் கலப்புப் பெயர்களாகவோ காணப்படுகின்றன. தமிழ்ப் பிரபந்தங்களை இயற்றிய புலவர்களிற் பலர், தமிழ் ஆரியம் என்ற இருமொழிகளிலும் வல்லவர் என்று தெரிகின்றது.

சங்க காலத்திலே வடமொழிக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படவில்லை. அதனுற்ருன் சங்கநூல்களில் வடமொழிக் கலப்பு அதிகமாக இல்லை. ஆனுல் மதவிஷயத்தில் மட்டும் வடமொழிப் போக்கை நமது மொழி சங்க காலத்திலேயே மேற்கொண்டுவிட்டது. மதசம்பந்தமான செய்திகளைக் கூறும் தமிழ் நூல்களும் நூற்பகுதிகளும் அதிகமாக வடசொற் கலப்புடையனவாக இருக்கின்றன.

மணிமேகலை என்ற நூலுள் பின்னுள்ள சில காதைகளையும், பரிபாடலையும் உற்று நோக்கு வார்க்கு இவ்வுண்மை விளங்கும்.

சமண மதமும் பௌத்த மதமும் தமிழரல்லாதார் கண்டறிந்தவை. ஆரியச் சிதைவாகிய பிராகிருத மொழியைப் பேசி வந்தவர்கள்தாம் அம்மதங்களைத் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்தார்கள். அவர்கள் தங்கள் சமயக்கொள்கைகளைத் தமிழ்நாட்டிற் புகுத்தவே தமிழைக் கற்றார்கள். சமணர்களாலும் பௌத்தர்களாலும் தமிழில் வடமொழிக் கலப்பு அதிகமாக ஏற்பட்டபோதிலும், அவர்கள் தமிழ் மொழிக்குச் செய்துள்ள பேருபகாரத்தை நாம் மறத்தலியலாது. இப்பொழுது நாம் அறிந்துள்ள தமிழ்நூல்களில், சிந்தாமணி, யாப்பருங்கலம், காரிகை, நம்பியகப்பொருள், நன்னூல், சில பாட்டியல்கள், நிகண்டுகளிற் பல முதலியன சமணரியற்றியவையாகும். மணிமேகலை, குண்டலகேசி, வீரசோழியம் முதலியவை பௌத்தரியற்றியவை. தொகை நூல்களிற்[1] சில நூல்களும் எஞ்சியவற்றுள் பல பாக்களும் சமண பௌத்தப் புலவர்கள் செய்தவை. திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய சில நூல்களைச்

---

1. தொகை நூல்களாவன பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு என்பவை.

செய்தவர்கள் சமணர் பௌத்தரோ என்ற ஐயப்பாடும் தமிழ்நாட்டில் நிலவி வருகிறது.

சைனர்கள் மணிப்பிரவாளம்[1] என்று புதிதாக ஒரு நடையைத் தோற்றுவித்தனர். இந்நடையில் தமிழ்ச் சொற்களும் வடமொழிச் சொற்களும் விரவியே வரும். இந்த நடையில் **ஸ்ரீபுராணம்** என்ற சைனநூலும், சமணமத சம்பந்தமான **நீலகேசியுரையும்** பிறவும் எழுதப்பட்டன. இந்நடையின் தோற்றம் ஏறக்குறைய கி. பி. ஏழாம் நூற்றாண்டாகஇருத்தல்வேண்டும். வைணவர்களும் சமணரைப் பின்பற்றித்தங்கள் உரை நூல்களை மணிப்பிரவாளத்திலேயே எழுதத்தொடங்கினார்கள். தமிழ் மொழியிலே வட சொற்கலப்பேற்பட்டபின்பு தோன்றிய**நன்னூல்** முதலிய இலக்கண நூல்களிலே, அவற்றை இயற்றினோர் வட சொற்களுக்கு இலக்கணம் வகுக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. வடமொழிச் சொற்களைத் தமிழோசைக்கியைய எங்ஙனம் மாற்றிக்கொள்ளவேண்டுமென்பது முதலியன அந்நூல்களிற் காணப்படுகின்றன.

---

1. முத்துக்களும் பவளங்களும் நிரல்பட மாலையாகக் கோத்தாற்போல் தமிழ்ச்சொற்களும் வடமொழிச்சொற்களும் சமமாகக் கலந்துவர எழுதப்படும் ஒருவித நடை மணிப்பிரவாள மெனப்படும்—(மணி—முத்து; பிரவாளம் —பவளம்).

காலம் செல்லச் செல்ல வடசொற் பிரயோகம் இவ்விலக்கண வரம்பைக் கடந்துவிட்டது. வில்லி புத்தூரர், அருணகிரியார் முதலியோர் வட சொற்களைத் தமிழோசைக்கியைய மாற்றிக் கொள்ளாமல் அவற்றை அவற்றின் பழைய வடிவத்திலேயே தங்கள் நூல்களில் உபயோ கித்திருக்கின்றனர். மேற்கூறிய செய்திகளால் தமிழில் வடமொழிக் கலப்பேற்பட்ட வரலாறு ஒருவாறு விளங்குகின்றது.

சிறிது காலம் சென்றபின் தமிழ்நாட்டிலே **இந்துஸ்தானி** அரசியல் மொழியாக ஏற்பட்டது. அக்காலத்தில் இந்துஸ்தானிச் சொற்கள் பல, தமிழ் வழக்கிலே புகுந்தன. உலக வழக்கிலே—தமிழ்மக்கள் பேச்சு வழக்கிலே—இதுகாலை எத்துணையோ இந்துஸ்தானி மொழிகள்[1] கலந் திருக்கின்றன. அங்குஸ்தான், இரிசால், கஜானா, சபாஷ், சலாம், ஜமுக்காளம், ஜன்னல், சிரஸ்த தார், செக்குபந்தி, தாசில்தார், பராக், மகஜர் நாமா முதலியவை தமிழில் வழங்கும் இந்துஸ் தானி மொழிகளாம். பிற்காலத்துத் தமிழ்ப் புல வர்களும் இந்துஸ்தானி மொழிகளிற் பலவற்

1. முகம்மதியரின் பழக்கத்தால் தமிழிற் புகுந்த அராபிக், உருது முதலிய சொற்களையும் உட்படுத்தி இங்கே பொதுவாக இந்துஸ்தானி என்று குறித்துள் ளேன்.

றைத் தம் நூல்களில் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆங்கிலேயர் இன்று அரசியல் நிகழ்ச்சிகளை ஆங்கிலத்தின் வாயிலாக ஆற்றிவரினும், அத்துறையில் பல இந்துஸ்தானி வார்த்தைகள் கலந்திருப்பது ஈண்டு நோக்கத் தக்கது.

இப்பொழுது ஆங்கிலம் அரசியல்மொழியாக இருந்துவருவதால் ஆங்கிலச் சொற்களிற் பல, தமிழிற் பயின்றுவருகின்றன. கோர்ட், ஈரங்கி, கலெக்டர், ஆபீஸ், பெஞ்சு, மோட்டார், உயில் போன்ற சொற்களுக்கு நாம் தனித் தமிழ்ச் சொற்களை அமைத்துக் கொள்ளுதல் கூடும்; என்றாலும் பொதுமக்கள் அவ்வாக்கச் சொற்களைக் கொள்வார்களா என்பது சந்தேகம்.

இந்நாள் வரையில் தமிழ் வளர்ச்சி பிறமொழிகளின் தொடர்பினால் யாதொரு தடையையும் கண்டதில்லை. அதற்கு மாறாகப் பல சீர்திருத்தங்களைப் பெற்றுள்ளது என்னலாம். ஆரியத்தைப் பார்த்துத் தமிழ் அடைந்துள்ள மேன்மை இன்னதென்பது மேலே விவரிக்கப்பட்டது. ஆங்கிலத்தைக் கண்டு இக்காலத்தில் இது புதிய வன்மையைப் பெற்றிருக்கிறது என்னல் மிகையாகாது. ஆங்கிலம் இந்நாட்டிற்கு வந்த பின்னரே நாம் அம்மொழியை நோக்கி முற்றுப்புள்ளி முதலிய குறியீடுகளைத்

தமிழ் மொழிக்கு ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; தமிழ் வசன நடையும் சீர்மையுற்று வருகின்றது.

ஆயினும், ஆங்கிலம் கற்றவர்களிற் பெரும்பாலோர் தம் தமிழ் நடையில் நூற்றுக்கு ஐம்பதுக்கு அதிகமாக ஆங்கிலச்சொற்களைக் கலந்து பேசுகின்றனர். இவ்விதக் கலப்பு ஒருவகையிலும் தமிழுக்கு ஆக்கந்தராது. இங்ஙனமே சில தலைமுறைகள் செல்லுமாயின் தமிழின் வடிவம் மாறிவிடக்கூடும்; அறவே மறைந்துவிடுதலும் கூடும். இந்த மாறுபாடு மெல்ல மெல்ல நிகழ்வதால் ஒரு தலைமுறையில் உள்ளார்க்குப் புலனாகாது. ஆதலின் தமிழ்மொழியைப் பாதுகாக்க நாம் தீவிரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டிய காலம் இது.

தமிழ் மொழியிலே பிறமொழிகளில் இருப்பனபோல் விஞ்ஞானசாத்திர நூல்கள் இல்லை. அவற்றை நாம் மொழி பெயர்த்தே ஆகவேண்டும். அங்ஙனம் மொழி பெயர்த்துக் கொள்ளுதற்குப் போதிய தமிழ்ச் சொற்கள் நம் மொழியிலில்லாமை தமிழில் அந்நூல்கள் வெளிவருவதற்கு ஒரு தடையாக நிற்கின்றது. இந்நிலையில் நாம் பிறமொழிச் சொற்களைத் தழுவுவதா, அன்றி, விஞ்ஞான சாத்திர சம்பந்தமான பிற

மொழிச் சொற்களுக்கு நேரியவாறு ஆக்கச் சொற்களை உண்டாக்கிக் கொள்வதா? இந்த விஷயம் மிகச் சிக்கலானது.

தற்காலத்தில் தமிழிற்கு உரையாணியாக விளங்கும் மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம் டாக்டர் **உ. வே. சாமிநாதையரவர்கள்** தமிழிற் பிறமொழிக் கலப்பு விஷயமாகக் கொண்டுள்ள அபிப்பிராயத்தை இங்கே காட்டியுள்ளேன். அப்பெரியார் 1933-ஆம் டிஸம்பர், 23-ஆந் தேதி சென்னையிற் கூடிய **தமிழன்பர் மகாநாட்டில்** ஆற்றிய வரவேற்புப் பிரசங்கத்திலிருந்து சில பகுதிகள் கீழே காட்டப்பெற்றுள்ளன:

"இக்காலத்தில் விருத்தியாகி வரும் சாத்திர அறிவு தமிழ் மக்களிடத்தும் நன்றாகப் பரவவேண்டுவது இன்றியமையாததாதலின் அத்துறையிலுள்ள நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வெளியிடுதல் அவசியமேயாகும். ஆனால் அவ்வகை மொழிபெயர்ப்புக்கள் ஒழுங்கு முறையாக இருக்கவேண்டும். சாத்திர ஸம்பந்தமாகவும் பொருளின் பெயர்களாகவுமுள்ள மற்றப் பாஷைச் சொற்களும் வேறு சிலவகைச் சொற்களும் இப்பொழுது சாதாரணமாகத் தமிழில் வழங்குகின்றன. அவற்றை மாற்றிப் புதிய சொற்களை உபயோகிக்கத் தொடங்கினால் அப்புதிய சொற்கள் தமிழ்நாடு முழுவதும் வழக்கத்தில் அமைவதற்கு நெடுங்காலம்

ஆகும். சொற்களின் வழக்கமும், அவற்றின் பொருள் எளிதில் விளங்குதலும் முக்கியமேயன்றி எல்லாம் தனித் தமிழ்ச் சொற்களாகவே இருக்கவேண்டுமென் பது அநுபவத்தில் இயலுவதன்று..........."

"மொழி பெயர்க்கும்பொழுது பண்டைத் தமிழி லக்கியங்களில் கலைகளுக்குரியனவாக உள்ள சொற் களை இயன்றவரையில் உபயோகித்துக் கொள்ளலாம். பிற பாஷைச் சொற்களை எடுத்தாளும்பொழுது தமி ழுக்கு ஏற்றபடி அவற்றின் உருவத்தை மாற்றிக்கொள் ளலாம்..........."

"ஒருபாஷை வேறு பாஷையின் தொடர்பினால் விரிவுறும். அதனால் அப்பாஷையின் அழகு ஒரு போதும் குறையாது..........."

"தம் கருத்தை, தமிழ்நாட்டினர் எளிதில் அறிந்து கொள்ளவேண்டுமென்பதை எழுதுபவர்கள் மனத் திற்கொண்டு எழுதுவதுதான் பயனை அளிக்கும். பேசி னாலும் எழுதினாலும் கருத்தை அறிவிக்கும் நோக் கத்தை முக்கியமாகக் கொள்ளவேண்டுமே யன்றிக் கடின நடையைக் கைக்கொள்ளுதல் கூடாது; கொண் டால், 'தமிழே கடினமானது' என்ற எண்ணம் தமிழர் களுக்கு உண்டாகிவிடும்."

இப்பெரியாரின் அபிப்பிராயம் இங்ஙன மிருக்க, வேறு சில அறிஞர்கள் தமிழ் மொழி யிலே பிறமொழிக் கலப்பே இருத்தல் ஒண்

ணுது என்று கூறுகின்றூர்கள். இந்நிலையில் தமிழ் எழுத்தாளர்கள் தங்களுக்குத் தோன்றிய வழிகளிற் பிறமொழிகளை அதிகமாகக் கலந்தும் கலவாமலும் தமிழ் உரைநடையை எழுதி வரு கிறூர்கள். எல்லோரும் ஒன்றுசேர்ந்து 'இனி இன்ன வழியைத்தான் மேற்கொள்ளவேண் டும்' என்று திட்டமாக ஒரு முடிபுக்கு வருவது எந்நாளோ, அந்நாளிலிருந்துதான் தமிழுக்கு விமோசன மேற்படுமென்றெண்ணுகிறேன். நேற்றுத் தோன்றிய மொழிகள் எல்லாம் பல வாறு சீர்திருத்தங்களை அமைத்துக்கொண்டு இன்று நாகரிக உலகிலே கலைவளம் படைத் துத் திகழ, நம் பண்டைத் தமிழ் பழம் பெரு மையைப் பாராட்டிக்கொண்டு ஒருவழியிலும் முன்னேற்ற மடையாமல் தவிப்பதா? இவ்விஷ யத்தைத் தமிழரில் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துத் தம் தாய்மொழி வளர்ச்சிக்கு ஆவன செய்ய முற்படுவார்களாக.

# முரசு

அரசர்களுடைய சின்னங்களுள் முக்கியமாக உள்ளவை பத்து. அவற்றைத் தசாங்கமென்று கூறுவர். நாடு, நகர், மலை, ஆறு, யானை, குதிரை, மாலை, கொடி, படை, முரசு என்பன அவை. அவற்றுள் முரசைப் பேரரசர்களுக்குரிய சிறப்புக்களுள் ஒன்றாக வழங்குவர்.[1] பாண்டியனைப்பற்றி ஒருபுலவர் சொல்லும்பொழுது, "நீ பிறருக்குக் கிடைத்தற்கரிய கொற்கைத் துறை முத்தையும் பொதியின் மலைச் சந்தனத்தையும் முரசு மூன்றுடன் ஆளும் செல்வத்தை யுடையாய்" (புறநானூறு, 58)என்று பாராட்டுகின்றார். இதனால் பண்டைக் காலத்தில் முரசிற்கு இருந்து வந்த பெருமதிப்பு விளங்குகின்றது.

முரசு தோற் கருவிகளுள் ஒன்று. பெரும் பான்மையான தோற்கருவிகள் இசைத் தொடர்புடையன; அதாவது இசைக் கருவிகளாகப் பயன்படுவன; மத்தளம், சல்லிகை இடக்கை, கரடிகை, பேரிகை, படகம் முதலியன அத்தகையன. பறை, முரசென்னும் இரண்டும் தோற்கருவிகளே யாயினும் இசைக்குப் பயன்படாதன. இவ்விரண்டனுள்

1. அரசர்க்குரிய சிறப்புக்களுள் முரசும் ஒன்று என்னும் இவ்விஷயம் தொல்காப்பியம் மரபியல், 71-ஆம் சூத்திரத்தாலும் தெரியவருகிறது.

பறை இழிந்தது; முரசு உயர்ந்த மதிப்புடையது. தோற்கருவிகளை முழவு என்னும் பொதுப் பெயராற் குறிப்பது இசைநூலார் மரபு. அவர்கள் முரசைப் **பண்ணமை முழவு** என்னும் வகையிற் சேர்ப்பர். பண் என்பது இங்கே இசைக்குரிய பண்ணையன்று; அலங்காரம் அமைந்த முழவென்பதே இத்தொடரின் பொருள். முரசத்தை நன்னீராட்டி மயிற்பீலி, மலர்மாலை முதலியவற்றாற் புனைவது வழக்கமாதலின் இங்ஙனம் கூறப்படுகின்றதென்றே தோற்றுகின்றது. பண்ணமை முழவென்பவை வீரமுழவென்றும் கூறப்படும்; அவை முரசு, நிசாளம், துடுமை, திமிலை யென்பன. இந்நான்கு வீரமுழவினுள்ளும் தலைசிறந்தது முரசாதலின் அது முன்னே வைக்கப்பட்டிருக்கின்றது.

வீரர்களுக்குப் போர் செய்யும் மனவெழுச்சியை உண்டாக்கக் காரணமாதல் பற்றி வீரமுழவு என்னும் பெயர் அமைந்தது. எனவே முரசு பெரும்பாலும் போரின்கண்ணே பயன்படுவதென்பதை உணரலாம்; இக் கருத்தினாலே தான் பண்டைக் காலத்துப் புலவர்கள் பெரும்படைகளை வருணிக்கும்பொழுது **"முரசு முழங்கு தானை"** என்று சிறப்பிக்கின்றார்கள்.

ஆதிகாலத்து மனிதர்கள் வேட்டையாடி வயிறு வளர்த்து வந்தார்கள். அக்காலத்தில்

தாம் வேட்டையாடும் மிருகங்களின் தோலை அவர்கள் பலவிதங்களில் உபயோகித்துக் கொண்டனர். அங்ஙனம் உபயோகித்து அமைத்த பொருள்களுள் நெடுந்தூரம் கேட்கும் ஒலியுடைய பறை முதலிய தோற்கருவியும் உண்டு. தம்பட்டம் முதலியவற்றை அடித்தால் பலமான சத்தம் உண்டாகிறது. அந்தச் சத்தம் சிலருக்கு மனக்கிளர்ச்சியை உண்டாக்குவதை இக்காலத்துங் காணலாம்.

முற்காலத்தில் வேட்டையாடுபவர்கள் தம் தொழிலில் தமக்கு ஊக்கம் பிறப்பதற்கென்றே இத்தோற்கருவியை முழக்கினர். அவர்கள் காடுகளுக்குச்சென்று நாற்புறங்களையும் வலை, கண்ணி முதலியவற்றால் வளைத்துக்கொண்டு பறைகளை முழக்குவர்; அம் முழக்கத்தைக் கேட்டு வெருவி அங்கங்கே மறைந்திருக்கும் விலங்கினங்கள் வெளிப்பட்டு ஓடமுயலும். அங்ஙனம் ஓடி வந்து வலையிற்படும்.

இதனால் இசைக்குப் பயன்படாத தோற்கருவிகளாகிய பறை முதலியன வேட்டுவருக்கு ஊக்கத்தையும் விலங்கினங்களுக்கு அச்சத்தையும் விளைக்கும் பொருட்டுப் பயன்பட்டு வந்தனவென்பதை அறிகின்றோம்.

மனித வர்க்கம் நாகரிகம் பெறப் பெறத் தோற்கருவிகள் பலவாயின. மெத்தென்ற இனிய ஓசையையுடைய பல தோற் கருவிகளை மக்கள் இயற்றி இசைக்கருவிகளிற் சேர்த்துக் கொண்டனர். பேரொலிசெய்யும் தோற்கருவி களிலும் பலவகை உண்டாயின. அவற்றுள் முரசு சிறந்ததாகும். "கடிப்பிகு கண்முரசங் காதத்தோர் கேட்பர்" என்பதுமுரசுபேரொலி செய்வதென்பதைத் தெரிவிக்கின்றது.

பல இடங்களில் உள்ள மாந்தர்களும் கேட்டு ஒன்று கூடும்பொருட்டு இம்முரசம் பயன்பட்டு வந்தது. அரசர்கள் தங்கள் படை வீரர்களை ஒன்றுபடத் திரட்டுதற்கு இம்முரசை முழக்கச்செய்வர். அதன் ஒலிக்குறிப்பால், போர் தொடங்கப்படுமென்றுணர்ந்த வீரர்கள் தாம் தாம் மேற்கொண்டிருந்த காரியங்களை அப்படியப்படியே விட்டுவிட்டுப்போர்க்கோலம் பூண்பார்கள். முரசை முழக்குவதிற் சில சங்கே தங்கள் இருந்தன. அவற்றால் மக்கள், 'இன்ன காரியத்தின் பொருட்டு இம்முரசு முழங்குகின் றது' என்று அறிந்து கொண்டனர். போருக் குப் படை திரட்டவும், போரின்கண் வீரத்தை எழுப்பவும், வெற்றியின்கண் களிப்பை உண் டாக்கவும் முரசுகள் முழங்கின.

அக்காலத்தில் அரசர்கள் யுத்தத்திற்குப் புறப்படுகையில் நல்ல நாள் பார்த்துக்கொண்டு புறப்படும் நியதியை மேற்கொண்டிருந்தனர். தாங்கள் போருக்கு எழும் நாள் நன்மையுடையதாக இல்லை என்பதை அறியின் முன் நல்ல வேளையில் தங்கள் வாளையும், குடையையும், முரசையும் புறப்படச்செய்வர். இங்ஙனம் புறப்பாடு செய்தல் முறையே **வாள் நாட்கோடல், குடை நாட்கோடல், முரசு நாட்கோடலெனப்படும்.** முரசுநாட் கோடலென்பதற்கு இலக்கணத்தில் ஆதாரமில்லை; எனினும் இலக்கியங்களில் இச் செயல் குறிக்கப்படுகின்றது; **கரிகாற் சோழன்** வடதிசை வேந்தரை அடிப்படுக்கும் நோக்கத்துடன் போன செயலைச் சொல்லும் பொழுது **சிலப்பதிகார** ஆசிரியர்,

> “செருவெங் காதலிற் றிருமா வளவன்
> வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்
> நாளொடு பெயர்த்து”

என்று குறிக்கின்றார். இதனுள் வாளையும் குடையையும் முரசத்தையும் நல்ல நாளில் புறப்படச் செய்தானென்ற செய்தி இருக்கின்றது. முரசையும் நன்முகூர்த்தத்திற் போர்க்குப் புறப்பட விடுவதுண்டென்பதை இதனால் அறியலாம். தொல்காப்பிய முதலிய பழைய

இலக்கணங்களிற் கூறப்பெருத பல புறத் துறைச் செய்திகளைப் புறநானூறு, பதிற்றுப் பத்து, சிலப்பதிகாரம் முதலிய இலக்கியங்களிற் காண்கின்ரேம். அவ்வகையில் இந்த முரசு நாட் கோடலும் ஒன்று.

முரசினிடத்துத் தெய்வம் உறையுமென்றும் (பதிற்றுப்பத்து, 30), அதனல் அரசர்கள் அதற் குப் பலியிட்டுப் பூசித்தலுண்டென்றும்,அதனை வைப்பதற்காகச் சிறந்த கட்டில் அமைக்கப் படுவதுண்டென்றும் அந்தக் கட்டில் மனிதர் ஏறத்தகாத தூய்மையுடையதென்றும் தெரிய வருகிறது. அரசு வீற்றிருக்கும் அரசு கட்டி லாகிய சிங்காதனத்துக்கு எவ்வளவு உயர்வு உண்டோ அவ்வளவு உயர்வு முரசு கட்டிலுக் கும் இருந்து வந்தது.

மோசிகீரனுரென்ற புலவரொருவர், சேரமான் தகடூரேறிந்த பெருஞ் சேரலிரும்பொறை யென்ற சேர அரசனைக் காணவந்தார். அவர் நெடுந் தூரம் வழி நடந்து வந்தவராதலின் அரண் மனையிற் புக்கவுடன், சிறிது நேரமாயினும் ஓரிடத்திற் படுத்து இளைப்பாறவேண்டுமென்று தோற்றியது. அப்பொழுது அவ்வரசனதுரிமை யாகிய கொற்றமுரசம் நீராட்டும் பொருட்டு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. அது வைக்

கப்படும் கட்டில் மெத்தென்று இருந்தமையால் அதைக்கண்ட புலவர் இளைப்பின் மிகுதியால் அக்கட்டில் இன்னதற் காவதென்பதைக் கருதாமல் அதன்மேலேறித் துயின்றுவிட்டார். அவருடைய உடலில் இருந்த அயர்வும், அக்கட்டிலிலிருந்த அணைகளின் மென்மையும் அவர் என்றும் பெறாத இன்றுயிலை உண்டாக்கின. புலவர் சுகமாகத் துயின்றுகொண்டிருந்தார்.

அரசன் அவ்வழியே வந்தான். முரசு கட்டின்மீது அவன் பார்வை சென்றது. திடுக்கிட்டான். தெய்வத்துக்குரிய இடம் போன்ற அக் கட்டிலில் ஒருவர் தூங்குவதைப் பார்த்தான். கர்ப்பக் கிருகத்தைப் பள்ளியறையாக உபயோகப் படுத்தலாமா? அவனுடைய கண்கள் சிவந்தன. வாளை யுருவினான். கட்டிலின் அருகே போனான்.

இந்தத் துணிகரமான காரியத்தைச் செய்த மனிதர் யாரென்பதை யறிவதற்காக அவர் முகத்தை அரசன் நோக்கினான். என்ன வியப்பு! அரசன் கோபம் இருந்த இடம் தெரியவில்லை; வாள் உறைக்குட் சென்றது. வாளை யுருவிய கை அருகிலிருந்த கவரியை எடுத்தது. மற்றவர்களால் பலவகை உபசாரங்களைப் பெறும் புரவலர் பெருமான் அப்புலவருக்குச் சாமரத் தொண்டு புரிந்துகொண்டு நின்றான்.

புலவருடைய இனிய துயிலுக்கும் ஒரு வாறு விழிப்பு உண்டாயிற்று. கண் விழித்துப் பார்த்தார்; அரசர் கவரி வீசிக்கொண்டிருப் பதை உணர்ந்தார்; தாம் உறங்கியது முரசுகட்டி லென்பதை அப்போது அறிந்து திடீரென்று கீழே குதித்தார்! "ஆஹா! என்ன தமிழன்பு! என்ன தமிழன்பு! தெய்வத்துக்குச் சமான மான முரசு வீற்றிருக்கும் புனிதமாகிய கட் டிலின்மேல் ஏறி அறியாது படுத்துத் துயின்ற என்னை உன்னுடைய வாளால் வீசி யிருக்கவேண்டும்; நீ அது செய்யவில்லை. அச்செயலொன்றே தமிழை யறிந்து இன் புறும் உன்னுடைய அன்பைக் காட்டும்; வாளால் வீசவேண்டிய திருக்கரத்தால் கவரி கொண்டு வீசிய நின் பெருமையை எங்ஙனம் புகழ்வேன்! உனக்கு இந்த உலகமும் மறுமை யுலகும் உரியன" என்று பாராட்டினார். இந்த அரிய வரலாற்றைப் **புறநானூறு** 50-ஆம் செய்யு ளிற் காணலாம். இவ்வரலாற்றால் முரசு கட்டி லுக்கிருந்த பெருமதிப்பு வெளியாகின்றது.

அரசர்கள் தங்கள் பகை மன்னரைவென்ற பிறகு அவ்வெற்றிக்கு அறிகுறியாகத் தோற் றோருடைய முரசுகளைக் கைப்பற்றி முழக்குவர்.

பண்டைத் தமிழ் மன்னர்களில் ஒவ்வொரு வரும் ஒவ்வொரு வகை மரத்தை வளர்த்து

வந்தனர். அந்த மரத்தைக் காவல்மரமென்று சொல்வர். அதற்குத் தீங்கு நேராமல் பாதுகாப்பது வழக்கம். ஓரரசன் மற்றொருவனை வெல்ல நேரின் தோற்றவனது காவல் மரத்தில் தன் யானையைக் கட்டுவான்; அம்மரத்தை அடியோடு வெட்டி விடுவதும் உண்டு. அங்ஙனம் வெட்டிய பிறகு அம்மரத்தால் முரசு செய்வித்து அதனைக் கொற்ற முரசாக வைத்துக்கொள்வான். **இமையவரம்பன் நெடுஞ் சேரலாதன்** என்ற சேர அரசன் தன் பகையரச ஒருவனை வென்று அவனது காவல் மரமாகிய கடம்பினைத் தடிந்து அதனைக்கொண்டு ஒரு முரசத்தை அமைத்துக் கொண்டான்; இச்செய்தி **பதிற்றுப் பத்து** 11, 12-ஆம் செய்யுட்களால் அறியப்படுகின்றது.

முரசினுடைய அடிப்பாகம் இங்ஙனம் மரத்தாற் செய்யப்படுவதன்றி, வெண்கல முதலிய உலோகத்தாலும் இயற்றப்படுவதுண்டு. முரசு அறையப்படும் பக்கத்தைக் கண் என்றல் மரபு. அப்பக்கம் தோலால் மூடப்பட்டிருக்கும். அத்தோலை முரசோடு பொருத்தி அமைப்பதற்கு வார்களை இறுக்கிக் கட்டியிருப்பார்கள்.

முரசு எருதினுடைய தோலாற் செய்யப்படுமென்று நூல்களால் தெரிகின்றது. வீர

முரசுகள் பதம் பண்ணப்படாத பச்சைத் தோலாலே செய்யப்படுமென்று சிலப்பதிகார உரையால் அறியலாம். 'மயிர்க்கண் முரசம்' என்பதற்கு உரைகூறுங்காலத்தில் அடியார்க்கு நல்லார்,

'புலியைப் பொருது கொன்று நின்று சிலைத்துக் கோட்டுமண் கொண்ட ஏறு இறந்துழி அதன் உரிவை மயிர் சீவாமற் போர்த்த முரசு'

என்று பொருள் கூறி,

"புனைமருப் பழுந்தக் குத்திப்
புலியொடு பொருது வென்ற
கனைகுர லுருமுச் சீற்றக்
கதழ்விடை யுரிவை போர்த்த
துனைகுரல் முரசத் தானைத்
தோன்றலைத் தம்பி னென்றான்
நனைமல ரலங்கற் கண்ணி
நந்தனுந் தொழுது சேர்ந்தான்"

என்ற சிந்தாமணிச் செய்யுளையும்,

"கொல்லேற்றுப் பசுந்தோல் சீவாது போர்த்த
மயிர்க்கண் முரச மோவில கறங்க"

என்ற மதுரைக் காஞ்சி யடிகளையும் மேற்கோள் காட்டுகின்றார். தம்முள்ளே பொருத இரண்டு காளைகளில் வென்ற ஏறு இறந்த பின் அதன் தோலை முரசத்திற்குப் போர்த்தலும் உண்டு.[1]

1. புறநானூறு, 288.

முரசை அடிக்கும் குறுந்தடி, கடிப் பென்று வழங்கப்படும்; குணிலென்பதும் உண்டு.

முரசு மூன்றுவகைப்படும். போர் முரசு, மண முரசு, கொடை முரசென்பன அவை; மண முரசைவிட்டு நியாய முரசைக் கூறுவதும் உண்டு. மணம் நடை பெறுவதையும், கொடை தருவதையும், நியாயசபை கூடுவதையும் பல ருக்கு அறிவித்தற் பொருட்டே இம்முரசுகள் பயன்பட்டன. அம்மூவகை முரசுகளிலும் ஒலி வேறுபாடு உண்டென்று தோற்றுகின்றது. அவ்வேறுபாட்டால் இம்முரசொலி இன்னதை அறிவிக்கின்றதென்பதை யாவரும் அறிவர் போலும்.

திருவிழா முதலிய சந்தர்ப்பங்களில் முரச றைந்து விழாவை நகரமாந்தர்க்கு அறிவித்த லும், அரசர் மாளிகையிற் காலையில் முரசுமுழங் குவதும் வழக்கத்தில் இருந்தன. முரசொலி யைக் கேட்டல் நன்னிமித்தமாகும்.[1]

முரசை அறைபவன் வள்ளுவன் எனப்படு வான். பெரும்பாலும் முரசை யானையின் மேலேற்றியே அறைவது மரபு. யானை சிறந்த மதிப்புடையது. அதன்மேல் ஏற்றுவதற்குரி

1. சீவக சிந்தாமணி, 1617.

மையுடைமையே முரசினது சிறப்பை வெளிப்படுத்தும். வள்ளுவனை முதுக்குடிப் பிறந்தோனென்று **மணிமேகலை** கூறுகின்றது. முரசறையும் போது அவ்வள்ளுவன் மலர்மாலையாலும் சிறந்த ஆடைகளாலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு யானையின்மேல் அம்முரசத்தை ஏற்றி, அரசனையும் ஊரையும் வாழ்த்தியபின் தெரிவிக்க வேண்டிய செய்தியைக் கூறவேண்டும் என்ற முறை அக்காலத்தில் இருந்தது. முதுமகன் 'திருநாள், படைநாள், கடிநாளென்றிப் பெருநாட் கல்லது பிறநாட்கு முரசு அறையான்' என்பர்.

தமிழ் நூல்கள் பலவற்றில் முரசும் சங்கும் இணைத்துக் கூறப்படுகின்றன. மங்கலகாரியங்களிலும் போரிலும் இவ்விரண்டும் பயன் படுவது பற்றி இங்ஙனம் சொல்லும் மரபு உண்டாயிற்றுப் போலும். இத்தகைய சிறப்புப்பொருந்திய முரசை அறமே உருவாக அமைந்த தருமபுத்திரர் தம் கொடியிற் பொறித்து வைத்தமை மிகப் பொருத்தமுடையதே யாகும்.

முரசை இக்காலத்தார் '**ஜயபேரிகை**' என்ற வடமொழித் தொடரால் குறிப்பர். தமிழரது முரசின் உயர்வைப் பெற்ற வேறொரு வாத்தியம் எங்கும் இல்லை.

முற்றிற்று. 3432

THE B. N. PRESS, MADRAS.

*Copies can be had of :—*

**S. G. GANAPATHI IYER,**

**627, Triplicane High Road,**

**TRIPLICANE, MADRAS.**